2026

புதிய
PUTHIA THEDAL
# தேடல்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

தமிழ் மாத இதழ்
Tamil Monthly Magazine




Volume 17 | Issue 8 | August 2026 | Pages 36 | Price Rs.20/- | Annual Subscription - 200/-

மலர் 17 | இதழ் 8 | ஆகஸ்ட் 2026 | பக்கம் 36 | விலை ரூ.20/- | ஆண்டு சந்தா - 200/-


MARY AGENCIES & ELECTRICALS
MAMOOTTUKADAI,VIRICODE POST,
MARTHANDAM - 629165
K.K DIST, TAMIL NADU
Taro Pumps
HAVELLS
KĀBEL
legrand
Crompton
FinOlex
Pipes
asianpaints
12 Years Guarantee
Made From 100% Virgin
HYCOUNT HYPOND
Threaded Type Lid
royale
royale HEALTH SHIELD
TRACTOR SPARC
TRACTOR EMULSION
TRACTOR SHYNE
apcolite
We are providing quality products in retail and Wholesale of branded electrical products, plumping products and sanitaryware products institutions throughout kanyakumari district and Kerala.
Phone:04651-271662
Mobile:09442271662
Mobile:9443579667
Mobile:9360629377

## புதிய தேடல்

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள்முனைவர் **இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச்செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள்முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி:*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் - 629 179**

**கைபேசி** : **9443693505, 8525032383**

**மின் அஞ்சல்**: newputhiathedal@gmail.com

**தனி இதழ் : ₹ 20**

**ஆண்டுச் சந்தா : ₹ 200**

**ஆயுள் சந்தா : ₹ 2000**



**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| பலவண்ண அட்டை வெளிப்பக்கம் | : ₹ 12000 |
| பலவண்ண அட்டை உள்பக்கம் | : ₹ 7000 |
| முழுப்பக்கம் கறுப்பு | : ₹ 2000 |
| அரைப்பக்கம் கறுப்பு | : ₹ 1000 |




# *ஆசிரியரின் அன்பு வரிகள்*


அருள்முனைவர்

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**


**புதுப்பிறப்படைய, புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

**‘பூமித்தாய் உயிர் காப்பாள்**
**பெற்றதாய் நலம் காப்பாள்**
**நிலம் வாழ பயிர் வளரும்**
**நலம் பேண மனிதம் வளரும்**
**தாய்மையினால் நாம் மகிழ்வோம்’**

உலகத்தில் எல்லா மொழிகளிலும் மிக அழகான சொல் அம்மாவை குறிக்கும் சொல். அம்மா என்பது இவ்வுலகில் நிபந்தனையற்ற அன்பின் வெளிப்பாடு, தியாகத்தின் அடையாளம். கடவுளுடைய உடனிருப்பைத் தரணி பெற்றுக்கொள்ளக் கடவுள் அளித்த மாபெரும் கொடையே தாய்மை.

தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது என்கிறார் நபிகள் நாயகம். வாழ்க்கை உறவை உதறித் தள்ளிய பட்டினத்தாராலும் தாயின் உறவைத் தவிர்க்க முடியவில்லை. தன்னுடைய நற்குணங்கள் எல்லாவற்றிற்கும் தன் தாயே கடமைப்பட்டவர் என்கிறார் ஆபிரகாம் லிங்கன்.

விவிலியத்தில் விடுதலையின் தாயாக, யூதச் சமூகத்தினுடைய அடிமைச் சங்கிலிகளை தகர்த்தெறிந்து, தடம் மாறிய மனுக் குலத்திற்குத் தன் தவப்புதல்வனை அர்ப்பணித்து, மீட்பின் கருவியாக மாறுகிறார் அன்னை மரியா. அன்னையின் தாழ்ச்சி, பிறரன்பு, அர்ப்பணம், இறைத் திருவுளத்தை நிறைவேற்றும் மாண்பு தளராத மனம் யூத சமூகத்திற்கு மட்டும் அல்ல மாறாக இவ்வுலக மாற்றத்திற்கும் புதுப்பாதையானது. இதனால் புது உலகம் உருவானது. தரணி வாழ்கிறது தாய்மை மகிழ்கின்றது. தாய்மைக்கு ஈடு இணை இந்த உலகில் எதுவுமில்லை. தன்னலமற்ற தாய்மை குடும்பத்தை மகிழ்விக்கும். உயர்ந்த விழுமியங்களைச் சமூகத்தில் உருவாக்கும்; உலகத்தின் முகத்தை மாற்றி புது வடிவம் அமைத்துப் புன்னகையோடு தரணி மாந்தர் வாழ வழிகாட்டும். தாய்மை என்னும் தீபம் இந்த உலகில் சுடர் விட்டு எரிவதால்தான் பாசம் என்னும் மனிதநேய ஒளி இன்னும் இந்த உலகை ஆளுகின்றது. நேர்மறையான பெண்கள் குடும்பத்தில் எப்போதும் மகிழ்ச்சியை உருவாக்குவார்கள்.

தாய்மை என்னும் வேர்களில்தான் பாசம் என்னும் மரம் பூத்துக் குலுக்கிக் காய்த்துக் கனிந்து பலன் அளிக்கின்றது. தாய்மை இறைவனின் கொடை, உலகுக்கு வரம். தாய்மை மகிழ உலகினை வளப்படுத்துவோம்; வலுப்படுத்துவோம்; தாய்மையைக் கொண்டாடுவோம். தாய்மை மகிழட்டும்; தரணி வாழட்டும்; தலைமுறை போற்றட்டும்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்கப் புதிய தேடல்**
**வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

**"தரணி வாழட்டும்! தாய்மை மகிழட்டும்!"** என்னும் உன்னதமான வாக்கினை மனித குலத்தின் விடியலாகக் கருதப்படும் அன்னை மரியாவின் வாழ்வோடு இணைத்துப் பார்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த உலகம் வெறும் பிறப்பினால் மட்டுமல்ல, மாறாக அன்னை மரியாவைப் போன்று அன்பு, கரிசனை ஆகியவற்றால் மனிதநேயம் தழைக்க வழிவகுத்த தாய்மையினால்தான் இயங்குகின்றது.

இப்பூவுலகில் எண்ணிலடங்கா மனிதர்கள் வாழ்ந்திருந்தாலும் ஒரு சில மனிதர்களின் வாழ்வுதான் வரலாற்றின் போக்கையே மாற்றி அமைத்துள்ளது. அதில் மிகச் சிறப்புக்குரியது அன்னை மரியாவின் பிறப்பும் வாழ்வுமாகும். அது மனிதகுலத்தின் வரவு மட்டுமல்ல, மாறாக மனித குலத்தின் நம்பிக்கைக்கும் விடுதலை வாழ்விற்கும் கிடைத்த விடியலின் ஒளியாகும்.

**"இதோ ஆண்டவரின் அடிமை; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்"** என்று இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாகத் தன்னைத் தாழ்த்திக் கொடுத்த அன்னை மரியாவின் தாய்மை புதுமை நிறைந்த வாழ்விற்கு ஒரு முதன்மை மாதிரியாகும்.

அன்னை மரியாவின் தாழ்ச்சியும், நம்பிக்கையும், தியாகமும் உலகெங்கும் உள்ள மக்களை இன்னும் நல்வழிப்படுத்துகின்றன. தாய்மை மதிக்கப்படும் சமூகத்தில் குற்றங்கள் அகன்று, இறைவனின் இரக்கமும் நீதியும் ஆட்சி செய்யும்.

அன்னை மரியாவைப்போல வாழ்வை அர்ப்பணித்து உலகை வாழ்விக்கும் அனைத்து அன்னையரின் தியாகத்தையும் நன்றியோடு கொண்டாடுவோம். தாய்மை எங்கு கொண்டாடப்படுகிறதோ, அங்கு இறைவனின் அருளும் அமைதியும் நிலை கொள்கின்றன.

விண்ணகத்தின் அரசியாகவும் எளியோரின் துணையாகவும் விளங்கும் அன்னை மரியா ஒவ்வொரு தாய்க்கும் தியாகத்தின் பெருமையைக் கற்றுக் கொடுக்கின்றார். அன்னையின் நற்பண்புகள் எங்கெல்லாம் நிலைக்கின்றனவோ அங்கெல்லாம் தாய்மை செல்கின்றது; தரணி வளர்கின்றது. தாய்மையின் மகிழ்வு என்றென்றும் நிலைக்கட்டும்! தரணி வாழட்டும்! இறையாசி நம்மில் நிலைத்திருக்கட்டும்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்.

இதழ் 08 மலர் 17 ஆகஸ்ட் 2026


| எண் | படைப்பு |
|---|---|
| 1. | ஆசிரியரின் அன்பு வரிகள் |
| 2. | ஆயரின் அமுத மொழிகள் |
| 3. | திருமுழுக்கு யோவானின் பாடுகள் நமக்கு பாடங்கள் |
| 4. | துன்பத்தில் துணைநிற்கும் தாய் வியாகுல அன்னை |
| 5. | அர்ப்பண வாழ்வின் அருஞ்சொற்பொருள் அன்னை தெரசா |
| 6. | தற்கொலைத் தடுப்பு வாயில்காவலர் உயிரைக் காப்பாற்றும் மனிதநேயர் |
| 7. | கடவுள் தந்த கொடை கன்னி மரியாவின் பிறப்பு |
| 8. | உலக மூத்த குடிமக்கள் தினம் என்றும் சுகமா? |
| 9. | காணாமல் போனவர்கள் |
| 10. | அரசியான புனித கன்னி மரியா |
| 11. | ஆயரின் அலுவல்கள் |
| 12. | பெண்கள் சமத்துவ நாள் |
| 13. | அருளாளர் பிரெடரிக் ஓசானாம் |
| 14. | சிலுவை நமது ஏக நம்பிக்கை |
| 15. | ஆசிரியப்பணியும் சவால்களும் |
| 16. | வெப்பமயமாகி வரும் பூமியைக் குளிர்விப்போம் |
| 17. | உயர்ந்து வரும் வாழ்க்கை முறை நோய்ச் சுமையும் |
| 18. | இயற்கை மருத்துவத் தீர்வும் |
| 19. | பணிக்குழுக்களின் செயல்பாட்டு அறிக்கைகள் |



# திருமுழுக்கு யோவானின் பாடுகள்
# நமக்கு பாடங்கள்

அருள்முனைவர். எ. ஒய்சிலின் சேவியர்

நீதிக்காக நிலைப்பாடு எடுக்கும் உள்ளம்
உண்மையை உரக்கச் சொல்லும் துணிச்சல்
நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே
என்கிற தீர்க்கமான மனநிலை
எச்சூழலிலும் அநீதியோடு சமரசம் செய்யாத மனம்
சவால்களைச் சந்திக்கும் அலாதியான ஆற்றல்

அனைத்தையும் ஒருங்கே கொண்டு நீதியின் குரலாய் ஏழைகளின் தோழனாய் இயேசுவின் வழியை ஆயத்தம் செய்த அன்பராய் விளங்கியவர் புனித திருமுழுக்கு யோவான். அவரது பிறப்பே அதிசயமான அழகான பிறப்பு. தாயின் வயிற்றில் இருக்கும்போதே துள்ளி மகிழ்ந்தவர் திருமுழுக்கு யோவான். எளிய வாழ்வு, தோலாடை, இயற்கை உணவு போன்றவற்றைத் தத்தெடுத்து இயேசுவின் வருகையை அறுதியிட்டு அறிவித்தவர். அவர் நீதியை இடைக்கச்சையாகவும் நேர்மையை மார்புக் கவசமாகவும் கொண்டு வாழ்ந்தவர். அரசன் தப்பு செய்தாலும் தப்புதான் என்பதை எந்தவித சமரசப் போக்கும் இல்லாமல் போர்வாளாய் வெளிப்படுத்தியவர் திருமுழுக்கு யோவான்.

எந்தவிதப் பேதமும் பேரமும் அவருடைய அகராதியில் இல்லை. அனைத்தையும் அறுத்துப் போட்டவர். தவறுகளைத் தப்பாமல் தைரியமாக எரிமலையாக எழுந்து நின்று உரக்கச் சொன்னவர். உண்மையை உரக்கச் சொல்லி அன்றைய மன்னர்களையும் எதிர்த்து நின்ற எதிர்ப்புக் குரல். அவர்களையும் நடுங்க வைத்த சிம்ம சொப்பனம். அநீதிகளை அடித்த சம்மட்டி, இறைமகன் இயேசுவைச் சுட்டிக்காட்டவே பாலை நிலத்தில் இயேசுவின் குரலாக ஒலித்தார். அந்நேரமே பரிசேயர், சதுசேர்களை, பார்த்து **விரியன் பாம்புக் குட்டிகளே வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்?** என துணிச்சலோடு கேட்டவர்.

திருமுழுக்கு யோவான் சாதாரண, சாமானிய மக்களை மட்டும் கண்டிக்கவில்லை. குறுநில மன்னர்களையும் மகான்கள் என்று தங்களைக் கருதியவர்களையும் கண்டித்தார்; கண்காணித்தார். குறிப்பாக, குறுநில அரசன் ஏரோது தன் சகோதரனான பிலிப்புவின் மனைவி ஏரோதியாவை மனைவியாக வைத்திருந்ததை யோவான் கண்டித்தார். உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு தரம் தாழ்ந்த செயல்களில் ஈடுபடுவதை எப்போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிற எதார்த்தத்தை எதிர்ப்புக் குரலோடு பதிவு செய்தார். இதனால் ஏரோதியா ஆத்திரமும் ஆவேசமும் கொண்டு எப்படியாவது திருமுழுக்கு யோவானைத் தீர்த்து கட்ட வேண்டும் என்று தீர்மானம் எடுத்தாள்.

திருமுழுக்கு யோவான் நேர்மையும் தூய்மையும் கொண்டவர் என்று விவிலியம் குறிப்பிடுகின்றது. எனவே ஏரோது அவருக்குப் பாதுகாப்பு அளித்த வந்தான். ஆனால் அதே நேரத்தில் ஏரோதியா அவர் மீது காழ்ப்புணர்வும், கசப்புணர்வும் கொண்டு பழிவாங்கத் துடித்துக் கொண்டே இருந்தாள். ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வரும், அதைச் சாதகமாகப் பயன்படுத்தி உயிரைப் பறித்துக் கொள்ளலாம் என்கின்ற வெறியோடும் வேட்கையோடும் காணப்பட்டாள் ஏரோதியா பழிவாங்க வேண்டும், உயிரைப் பறிக்க வேண்டும் என்று முடிவு எடுத்துவிட்டால் வாழ்க்கைக்கு முடிவு கட்டி முற்றுப்புள்ளி வைத்து விடுவார்கள். அதே போன்றுத் தான் ஏரோதியா திருமுழுக்கு யோவானின் உயிருக்கு உலை வைப்பதற்கு விலை பேசுகிறாள். சந்தர்ப்பத்தைச் சாதகமாக பயன்படுத்துகிறாள்.

ஏரோதியாவுக்குக் கிடைத்த வாய்ப்பைத் தவறாக பயன்படுத்துகிறாள். சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக்கி கொள்கிறாள். ஏரோது தன் பிறந்தநாளில் அரசவைக் ஊழியருக்கும் ஆயிரத்தவர் தலைவருக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்கிறான். அப்போது ஏரோதியா மகள் உள்ளே வந்து நடனமாடி அவையினர் அனைவரையும் மகிழ்விக்கின்றாள். அரசன் அச்சிறுமியிடம் என்ன வேண்டுமென்றாலும் கேள் தருகிறேன் என்றான். நான் என்ன கேட்கலாம் என்று சிந்தித்த சிறுமியால்

முடிவெடுக்க முடியவில்லை. அதற்கான பக்குவம் இல்லாத சிறுமி திகைத்தாள்; திணறினாள்; குழம்பினாள்; பதறிப்போய் நின்றாள்; எனவே தன் தாயிடம் கேட்கிறாள். தலைமகனின் அரசவையைக் கேட்கச் சொல்லாமல் திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள் என்று தவறாக வழிகாட்டுகிறாள் தாய், ஏனென்றால் தவறான பாதையில் பயணிக்கக் கூடியவள் ஏரோதியாள். எனவேதான் தன் மகளையும் தவறான பாதைக்கு அழைத்து செல்கிறாள். சிறுமி அரசனிடம் திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும் என்று கேட்கிறாள்.

ஏற்கனவே ஏரோதுவை கண்டித்ததால் ஏரோதுவால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் திருமுழுக்கு யோவான். உடனே அவன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையை வெட்டிக் கொண்டு வருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் இருந்த யோவானின் தலையை வெட்டி அதை ஒரு தட்டில் கொண்டு வந்து அச்சிறுமிடம் கொடுக்க, அவளும் அதை தன் தாயிடம் கொடுத்தாள். இங்குக் கொலைகாரர்கள் யார் என்ற கேள்வியைக் கேட்டு பார்ப்போம். தலையைத் துண்டிக்கப் பணித்த ஏரோதுவா? தலையைத் துண்டித்த காவலனா? தலையைக் கேட்ட சிறுமியா? இல்லை தன் மகளைத் தவறாக வழிநடத்திய வழிகாட்டிய ஏரோதியாள்? சிந்திப்போம். இவர்களுக்குத் தீர்ப்பு வழங்கும் முன் நாம் யார் என உள்ளத்தில் சிந்திப்போம். நாம் யாராக இந்த இடத்தில் இருக்கிறோம் என்று சிந்தித்து மனம் மாறுவோம்.

திருமுழுக்கு யோவானை அடியொற்றி வாழ்ந்தவர்தான் செம்மண் புனித அருளானந்தர். தடியத்தேவர் பல பெண்களோடு தொடர்பு வைத்திருந்ததைச் சுட்டிக்காட்டியதால் அப்பண்களின் உறவினர்களே அவரின் தலையை வெட்டி உடலைப் பறவைகளுக்கு இரையாக்கினார்கள். அம்மண் செம்மணாகவும், செந்நீர் நிலமாகவும் காட்சியளிக்கிறது என்றால் அவரது ரத்தமே காரணமே என்பதை என்றும் அவரது மறைசாட்சியம் நமக்கு நினைவூட்டுகிறது.

திருமுழுக்கு யோவானின் பாடுகள், அவரது மரணத்திற்கு முன்னரே இயேசு அவரைப்பற்றி சான்றுபகர்ந்தார். **மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானை விடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை** என்பதே இயேசுவின் சான்று. இறைவாக்கினர் மலாக்கி **இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்** என்று யோவானைப் பற்றி முன்னறிவித்துள்ளார். திருமுழுக்கு யோவானைப் பற்றி அவர் தந்தை செக்கரியா பின்வருமாறு குறிப்பிடுகிறார்; **குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய். ஏனெனில் பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைபடுத்த அவர் முன்னே செல்வாய்.**

திருமுழுக்கு யோவானைவிட இவ்வுலகில் பெரியவர் எவரும் தோன்றியதில்லை; தோன்றப் போவதுமில்லை; திருமுழுக்கு யோவானின் பாடுகளுக்கு இவ்வுலகத் திருச்சபை விழா எடுத்து நினைவு கூருகின்றது. இது கொண்டாடுவதற்கோ, திண்டாடுவதற்கோ, திட்டித்தீர்ப்பதற்கோ இல்லை. மாறாக, நாம் ஏரோதுவை போன்றோ, ஏரோதியாளைப் போன்றோ இருக்கக் கூடாது என்கிற பாடத்தை நமக்கு கற்றுத் தருகிறது. ஒரு நடனம், இன்பம் இவை எல்லாம் ஓர் உயிருக்கு ஈடாகுமா? சிந்தித்துப் பார்ப்போம். இன்று ஒரு குவளை மதுவுக்காக கொஞ்சம் பணத்துக்காக அப்பாவிகளை, அப்பழுக்கற்றவர்களை, நீதிமான்களை, தூய்மையானவர்களை, உண்மையானவர்களை கொலை செய்யும் நிலை அதிகரித்து வருகிறது.

நாமும் பல நேரங்களில் ஆயுதங்களால், கருவிகளால் மனிதர்களின் தலையை வெட்டாமல் இருந்தாலும், விமர்சனங்களால், தவறான தீர்ப்புகளால், சொற்களால் அவர்களின் உயிரைப் பறிக்கிறோம். நாம் அவர்களின் உயிரைப் பறித்துப் பழிவாங்கினாலும் கடவுள் அவர்களை வணக்கத்துக்கும் அன்புக்கும் உரியவர்களாக மாற்றுவார் என்கிற உணர்வோடு நாம் மனம் மாறுவோம்.

திருமுழுக்கு யோவானின் பாடுகள் நமக்குப் பாடமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. முன்னுதாரணமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக எடுத்து வைக்கப்பட்டுள்ளன. உண்மைக்காகவும், நீதிக்காகவும் திருமுழுக்கு யோவானை போல் வாழ வழிகாட்டப்பட்டுள்ளது. ஆனால் ஏரோதுவைப்போல, ஏரோதியாவைப்போல, சிறுமியைப் போல வாழக்கூடாது என்றே அறிவுறுத்தப்படுகிறோம். எனவே திருமுழுக்கு யோவானின் பாடுகள் நமக்குப் பாடமாக அமைந்ததுபோல் நாமும் வாழ்வோம். அநீதிகளோடு சமரசம் செய்யாமல் சவால்களைச் சந்திக்கும் வரம் கேட்போம்.

# துன்பத்தில் துணைநிற்கும் தாய் வியாகுல அன்னை

புனித வியாகுல அன்னையின் திருவிழாவை தாய்த் திருஅவை செப்டம்பர் 15 அன்று மிகுந்த பக்தியோடு கொண்டாடுகிறது. இந்த நாள், அன்னை மரியாவின் துன்பங்களை மட்டும் நினைகூர்வதற்காக அல்ல. மாறாக, துன்பத்தை நம்பிக்கையுடன் சுமந்த அவரது உறுதியான மனநிலையைக் கற்றுக்கொள்வதற்காகக் கொண்டாடப்படுகிறது.

கடவுள் மனிதகுலத்தை மீட்க இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். அந்த இறைத் திட்டத்திற்கு, 'ஆம்' என்று சொல்லி இறைவனின் திருவுளத்தை ஏற்றுக்கொண்டவர் மரியா. இயேசுவின் பிறப்பிலிருந்து சிலுவை மரணம் வரை அவருடன் நடந்தார். எனவே, அவர் மீட்பரின் தாய் மட்டுமல்ல, துன்பத்தை நம்பிக்கையோடு சுமந்த நம்பிக்கையின் தாயும் ஆவார்.



**வரலாற்றுப் பின்னனி**

திருத்தந்தை 7-ம் பயஸ் 1808 ஆம் ஆண்டு அரசன் நெப்போலியனால் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார். அவர் விடுதலை செய்யப்பட்டு உரோமையை வந்தடைந்த பின்பு தனது துயரம் மற்றும் அக்காலத்தில் திருஅவை அனுபவித்த துயரத்தை நினைவுகூரும் வண்ணம் வியாகுல அன்னைத் திருவிழாவை 1814-ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ம் நாள் உலகம் முழுவதும் கொண்டாடும்படி அறிவித்தார். பின்னர் வந்த திருத்தந்தை 10-ம் பயஸ் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழாவிற்கு அடுத்த நாளான செப்டம்பர் 15-ம் நாளில் இந்த விழாவைக் கொண்டாடப் பணித்தார்.

தொடக்க காலத்தில் அன்னையின் வியாகுலம் என்பது அன்னை சிலுவையடியில் அனுபவித்த துயரத்தை மட்டுமே வலியுறுத்தியது. ஆனால் 17-ம் நூற்றாண்டுக்குப் பிறகு திருஅவை மரபில் அன்னை மரியாவின் வாழ்க்கையில் இடம்பெற்ற ஏழு முக்கிய துயரங்களை, அவரது இதயத்தை ஊடுருவக் குத்திய ஏழு வாள்களாக இந்த வியாகுலம் சுட்டிக்காட்டுவதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

**திருவிவிலிய அடிப்படை**

**1. சிமியோன் உரைத்த இறைவாக்கு:** இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாகச் செலுத்தியபோது, முதியவர் சிமியோன் மரியாவிடம் கூறினார்: 'உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும்.' (லூக் 2: 34- 35)

**2. எகிப்திற்குத் தப்பிச் செல்லுதல்:** ஏரோது அரசனின் கொடுமையிலிருந்து குழந்தை இயேசுவைக் காப்பாற்றக் குடும்பம் எகிப்திற்கு அகதிகளாகச் சென்றது. (மத் 2:13-15)

**3. பன்னிரண்டு வயது இயேசுவை இழந்த துயரம்:** மூன்று நாட்கள் இயேசுவைக் காணாமல் தேடிய பெற்றோரின் வேதனை. (லூக் 2:41-50)

**4. சிலுவையைச் சுமந்த இயேசுவைச் சந்தித்தல்:** கல்வாரி வழியில் துன்பத்துடன் நடந்த இயேசுவைப் பார்த்த அன்னையின் மனவேதனை.

**5. சிலுவையில் இயேசுவின் மரணம்:** தன் கண்முன்னே மகன் உயிர் விடுவதைக் கண்ட தாயின் சொல்லமுடியாத துயரம். (யோவா 19:25-30)

**6. இயேசுவின் திருவுடலை மடியில் ஏற்றுக்கொள்ளுதல்:** சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட இயேசுவின் உடலை அன்னை தன் மடியில் தாங்கினார். (லூக் 23: 50-54)

**7. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்தல்:** தன் மகனைக் கல்லறையில் ஒப்படைத்த தாயின் இறுதிப் பிரிவு வேதனை. (யோவான் 19:40-42)

இந்த ஏழு துயரங்களும் அன்னை மரியா துன்பத்தில் எப்படி இறைவனை நம்பினார் என்பதை நமக்குக் கற்றுத்தருகின்றன.

**திருஅவை மற்றும் புனிதர்களின் போதனைகள்:**

திருஅவை அன்னை மரியாவை 'வியாகுல அன்னை' என்று அழைப்பது, அவர் இயேசுவின் துன்பத்தில் ஆழமாகப் பங்குகொண்டதைக் குறிக்கிறது. அவர் இயேசுவுடன் சேர்ந்து சிலுவையில் அறையப்படவில்லை. ஆனால் ஒரு தாயின் இதயம் அனுபவிக்கக்கூடிய மிகப்பெரிய வேதனையை அனுபவித்தார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை குறித்த கோட்பாடு, அன்னை மரியா இறைவனின் மீட்புத் திட்டத்தில் நம்பிக்கையுடன் இணைந்து நடந்தவர் என்றும், சிலுவையின் அடியில் மகனுடன் ஒன்றிப்பில் நின்றவர் என்றும் போதிக்கிறது.

புனித பெர்னார்ட் கூறுகிறார்: 'சிலுவையில் கிறிஸ்துவின் உடல் காயப்பட்டபோது, மரியாவின் இதயம் காயப்பட்டது.' புனித அல்போன்சு லிகோரி, "அன்னை மரியாவின் துன்பங்கள் அவரது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன" என்கிறார்.

**வாழ்வியல் படிப்பினைகள்**

1. துன்பம் வாழ்க்கையின் முடிவு அல்ல. மரியா துன்பத்தைச் சந்தித்தார். ஆனால் நம்பிக்கையை இழக்கவில்லை. நாமும் சோதனைகளில் இறைவனை நம்ப வேண்டும்.
2. சிலுவையைத் தவிர்க்காமல் சுமக்க வேண்டும்: இயேசு சிலுவையைச் சுமந்தார். மரியா அதனுடன் இணைந்து நடந்தார். நாமும் நமது சிலுவைகளை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
3. துன்பப்படுபவர்களுடன் நிற்க வேண்டும்: வியாகுல அன்னை துன்புறும் மகனின் அருகில் நின்றார். அதுபோல நாம் நோயாளிகள், முதியவர்கள், ஏழைகள், தனிமையில் வாழ்பவர்கள் மற்றும் துயருறும் குடும்பங்களின் அருகில் நிற்க வேண்டும்.
4. இறைவேண்டலில் ஆறுதல் தேட வேண்டும்: மரியா இறைவனை விட்டுவிடவில்லை. துன்பத்தில் இறைவேண்டலே நமக்கு வலிமை தருகிறது.

இன்று பல குடும்பங்கள் பொருளாதார நெருக்கடி, நோய், போர், இடம்பெயர்வு, வேலை இழப்பு, குடும்பப் பிரிவு மற்றும் மனஅழுத்தம் போன்ற பல துன்பங்களை அனுபவிக்கின்றன. வியாகுல அன்னை அவர்களுக்கெல்லாம் ஆறுதலின் தாயாக இருக்கிறார். அவர் நமக்குச் சொல்லும் செய்தி: **'துன்பம் உன்னை உடைக்க வேண்டாம், இறைவனின் கரங்களில் ஒப்படை. சிலுவைக்குப் பிறகு உயிர்த்தெழுதல் உள்ளது'** என்பதேயாகும்.

புனித வியாகுல அன்னையின் திருவிழா, துன்பத்தைப் பற்றிய நினைவுநாள் மட்டுமல்ல. நம்பிக்கை, பொறுமை, தாயன்பு, இறைவனின் திருவுளத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை ஆகியவற்றை நினைவுப்படுத்தும் நம்பிக்கையின் திருவிழா ஆகும். அன்னை மரியா தன் வாழ்நாள் முழுவதும் துன்பங்களைச் சந்தித்தப்போதும், இறைவனின் அன்பிலிருந்து விலகவில்லை. எனவேதான் அவர் துன்புறும் அனைவருக்கும் ஆறுதலின் தாயாகவும் நம்பிக்கையின் அடையாளமாகவும் விளங்குகிறார். நாமும் வியாகுல அன்னையின் முன்மாதிரியைப் பின்பற்றி, நமது வாழ்க்கையின் சிலுவைகளை நம்பிக்கையுடன் சுமந்து, பிறரின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக மாறுவோம்.



# அர்ப்பண வாழ்வின் அருஞ்சொற்பொருள்
# அன்னை தெரசா

அருள்முனைவர் **ம. டேவிட் மைக்கேல்**

திரை கடலோடியும் திரவியம் தேடும் முனைப்பில் வெளிநாடு செல்லும் வேட்கை பலருக்கு இயல்பாகவே இருந்து வருகிறது. தனிநபர்கள் மட்டுமின்றி நாடுகள்கூடப் பிற நாடுகளை நோக்கி நகர்வதுண்டு. இந்திய ஒன்றியத்தில் இருந்து பிற நாடுகளுக்குச் செல்பவர்களாலும் அவ்வாறே இந்தியத் துணைக்கண்டம் நோக்கி பிறநாடுகளிலிருந்து வருகிறவர்களும் இருக்கிறார்கள். படிப்பு, மருத்துவம், வணிகம், சுற்றுலா, வேலைவாய்ப்பு இன்னும் பிற காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது காலங்காலமாக இருந்து வருகிறது. தனி நபர்களைத் தாண்டி நாடுகளேகூட பிற நாடுகளின் செல்வங்களின் மீது நாட்டம் கொண்டும் தம் எல்லைகளை விரிவுபடுத்திக்கொள்ளவும் படையெடுப்பதுண்டு. இந்தியா மீது படையெடுத்து ஆக்கிரமிக்கும் ஆர்வத்தில் பல நாடுகளும் அரசுகளும் வந்ததுண்டு. வியாபார நோக்கில் வந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட வெள்ளைக்காரர்களை இந்த தலைமுறையிலே பார்த்திருக்கிறோம். மேலும் பயணிகளாகவும் மறைபரப்பாளர்களாகவும் இங்கே வந்தவர்களும் அநேகருண்டு. அவர்களில் மாறுபட்டவராய் மறைபரப்ப வந்து மக்கள் நலப்பணிகளில் தன்னைக்கரைத்துக் கொண்டு தான் பிறந்த மண்ணையும் அடையாளத்தையும் துறந்து ஏழைகளின் முகவரியாய் மாறித் துறவு வாழ்வுக்குப் புதிய அர்த்தம் தந்தவர் அகிலம் போற்றும் அன்னை தெரசா.

அன்றைய அல்பேனியா நாட்டில் 1910 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் பிறந்து ஆக்னஸ் கோன்ஜா போஜா ஜியூ எனும் இயற்பெயர் கொண்ட வரலாற்று வனிதை தன் எட்டு வயதிலே மறைபரப்பாளர்களின் பணிகளால் ஈர்க்கப்பட்டு தானும் மறைபரப்பாளராக மாற வேண்டும் எனும் கனவை வளர்த்துக் கொண்டார். இந்த வேட்கையில் தன் பதினெட்டாம் வயதில் லொரேட்டோ சகோதரிகளின் துறவறச் சபையில் தன்னை மறைபரப்பாளராக இணைத்துக் கொண்டு இந்தியா நோக்கி புறப்பட்டார். 1929 ஆம் ஆண்டு தனது 19ஆம் வயதில் இந்தியா வந்தடைந்து டார்ஜிலிங்கில் தன் துறவற புகுநிலைப் பயிற்சியை மேற்கொண்டார். 1931 மே 24 அன்று தன் துறவற முதல் வார்த்தைப்பாட்டை மேற்கொண்டபோது மறைபரப்பாளர்களின் பாதுகாவலியான இயேசுவின் சிறுமலரென அறியப்படுகிற லிசியே நகரத்துத் தூய தெரசாவின் பெயரைத் தன் பெயராகத் தேர்ந்து கொண்டார். கிழக்குக் கல்கத்தாவின் லொரேட்டோ சகோதரிகள் இல்லத்தில் 1937 மே 14 அன்று தன் துறவற இறுதி வார்த்தைப்பாட்டை எடுத்துக் கொண்டார். துறவற வாழ்வில் எடுத்துக் கொள்ளப்படுகிற வார்த்தைப்பாடுகள் என்பவை துறவிகள் தாங்கள் ஏற்றுக்கொண்ட பணியிலும் வாழ்விலும் கண் மூடுகிற காலம் வரை நிலைத்திருப்பதற்கான உறுதிமொழியாகும். இறுதி வார்த்தைப்பாடு



எடுத்துக் கொள்கிற எல்லோரும் தங்கள் உறுதி மொழியில் இறுதிவரை நிலைத்திருப்பது இல்லை. மாற்றத்திற்கு மனிதர்கள் உட்பட்டவர்கள் என்பதால் சிலர் தங்கள் முடிவுகளை மாற்றிக் கொள்வதுமுண்டு. துறவிகளும் மனிதர்களே என்பதால் அவர்களும் சிலவேளைகளில் தங்கள் உறுதிமொழிகளை உதறித்தள்ளி விட்டு வாழ்க்கைப் பாதைகளையும் பயணங்களையும் மாற்றிக் கொள்வதுண்டு.

அல்பேனிய ஆக்னஸ் இந்தியாவின் தெரசாவாக மாறி இறுதி வார்த்தைப்பாட்டை உறுதியாக்கிவிட்ட பிறகு கல்கத்தா நகரில்

லொரேட்டோ துறவற சபையால் நிர்வகிக்கப்பட்ட பள்ளியில் ஆசிரியையாக அமர்த்தப்பட்டார். துறவு வாழ்வும் ஆசிரியப் பணியும் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தன. துறவிகளாக இருந்தாலும் அதிகார நாற்காலியை நோக்கி நகர வேண்டும் என்கிற உந்துதல் உலகைத் துறந்தவர்களுக்கும் வருவதுண்டு. ஆசிரியராக இருப்பவர் தலைமை ஆசிரியர் நாற்காலியை குறி வைப்பதும் துறவு வாழ்வைத் தொடங்கியவர்கள் தலைமைப் பீடம் நோக்கிக் காய்களை நகர்த்துவதும் துறவறத்தையும் பிடித்துக் கொண்ட மனித ஆசை என்பதை மறுப்பதற்கில்லை. இளந்துறவியாய் இருந்து ஆசிரியையாய்ப் பணி வாழ்வைத் தொடங்கிய தெரசாவிற்கும் தடம் மாற வேண்டும் என்ற எண்ணம் நாளாக நாளாக உருவாகி வந்தது. தடம் மாறும் எண்ணம் ஏன் வந்தது, எதற்காக வந்தது என்பதில்தான் அகிலத்தையே ஆட்கொண்ட இந்த அல்பேனிய ஆன்மீகப் புறா அன்னை தெரசா அர்ப்பண வாழ்விற்கான அருஞ்சொற்பொருளாய் துறவறம் ஏற்றுக் கொண்ட அனைவருக்கும் திகழ்கிறார்.

வழக்கமாக துறவிகள் இரண்டு வகைகளில் இருப்பர். இருக்கிற நிலையில் அச்சு அசல் பிசகாமல் அப்படியே இருந்து விடுவது ஒரு வகை. காலத்தின் அறிகுறிகள் இவர்களுக்குத் தென்படுவதும் இல்லை; அதில் அவர்கள் உடன்படுவதும் இல்லை. வந்து விட்டோம், எனவே **கலப்பையில் கை வைத்தவர் திரும்பி பார்க்கக் கூடாது** எனும் திருமறையின் வரிகளை அர்த்தம் அறியாமலே மேற்கோளாய்க் கொண்டு முடங்கி கிடப்பார்கள். இவர்கள் துறவிகள் எனும் தலைப்புக்குக் கீழ் தங்களை இணைத்துக் கொண்டாலும், துறவு வாழ்வின் நிகழ்கால நிதர்சனங்களைக் கவனத்தில் கொள்ளாமலே கட்டுண்டு கிடக்கிறவர்கள். இரண்டாம் வகையினரோ அடுத்த நிலைக்குக் கடந்து சென்று தங்கள் அர்ப்பணத்திற்கு அர்த்தம் தேடும் ஆவல் பறவைகளாய் இருப்பர். தங்கள் அழைப்பிற்கான தேடலில் அன்றாடம் ஈடுபட்டு அர்ப்பணத்திற்கான அர்த்தத்தை ஆராய்ந்து கொண்டிருப்பர். காலத்தின் அறிகுறிகளைக் கணித்து அதற்கேற்ப பயணத்தை மாற்றி அமைப்பர். இவர்களில் சிலர் தாங்கள் தேர்ந்தெடுத்த வாழ்க்கை அர்த்தம் இழந்ததாய் ஆதங்கம் கொண்டு தடம் மாறுவது உண்டு. துறவு நிலையைத் துணிந்து மேற்கொண்டு வார்த்தைப்பாட்டை உறுதிப்படுத்திய பிறகும் தங்கள் துறவு நிலையை துறந்துவிட்டு பொதுநிலைக்குள் புகுந்து விடுவதும் உண்டு. துறவு வாழ்வை தேர்ந்துக் கொண்ட தெரசா இந்த இரண்டு வகைக்கும் உட்படாத ஒரு புது வகை. இலக்கணத்தை மீறிய இலக்கியம் இவர். மரபுகளை உடைத்து மனித உணர்வுகளை மொழிபெயர்க்கும் புதுக்கவிதை இவர். எனவேதான் துறவுக்குத் தெளிவு தந்தார். அர்ப்பண வாழ்விற்கு அருஞ்சொற்பொருளானார்.

ஆசிரியப் பணியில் ஆர்வம் கொண்டாலும் அவரது வாழ்க்கையில் ஏதோ குறைவுபடுவதாக உணர்ந்தார். வழிமாறிப் போன ஆட்டுக்குட்டியைப் போல அவர் குழப்பத்திற்கு ஆளானார். குப்பை மேடுகளிடையே எழுந்து நின்ற கோபுரம்போல் லொரேட்டோ சகோதரிகளின் துறவற இல்லம் கல்கத்தாவின் கண்ணீர் வடிக்கும் ஏழைகள் நடுவே எழுந்து நின்றது. செல்வச் சீமானின் வீட்டில் வாசலருகே சீழ் பிடித்த புண்களை நக்கும் நாயோடு இருந்த இலாசரை சுட்டிக்காட்டிய இயேசுவின் உவமை தெரசாவை துறவறத்தில் தெளிய வைத்தது. அழகிய தோட்டத்துடன் அமைந்த வனப்பு மிக்க கட்டடம், நுனி நாக்கில் நடனமிடும் மிடுக்கு ஆங்கிலம், ஆவி பறக்க மேசையில் அமர்ந்திருக்கும் அறுசுவை உணவு, வெளிநாட்டு வசீகரத்துடன் அமைந்த துறவற ஆடை, கால்களிலே உயர்வகை காலணிகள், பயணித்திடச் சொகுசு வாகனம் என இத்தனையும் அமைந்திருக்கப் தேவ அழைத்தலுக்குத் தினசரி அர்த்தம் தேடிய தெரசாவுக்கு மட்டுமே தனது துறவுப் பயணம் அர்த்தம் தரவில்லையே என்கிற ஆதங்கம். **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்** என்கிற வள்ளலாரின் வருத்தமான வரிகளே இந்த வனிதைக்கு வாழ்வியலானது. எழில் மாடமாய் எழுந்து நின்ற மடத்திற்குள் அத்தனை வசதிகளும் அணிவகுத்து நின்றாலும் சாளரம் வழி வெளியே நோக்கினால் கல்கத்தா வீதியின் கொடூரம் தெரசாவின் விழிகளுக்குள் வேல் பாய்ச்சியது. கடவுளின் படைப்பில் காயப்பட்டுக் கிடந்தது கல்கத்தா வீதி. வறுமை அங்கே கோரத் தாண்டவம் ஆடியது. பஞ்சம் பசித்தவர்களின் முகங்களில் கோலம் வரைந்திருந்தது. வாழ்வை தொலைத்தவர்கள் வங்கத்து நகரத்தில் வரிந்து கட்டி நின்றார்கள். 1943 ஆம் ஆண்டு பசியாலும் பஞ்சத்தாலும் கல்கத்தா வீதிகளில்

மாண்டவர்கள் ஒருபுறம் என்றால் மறுபுறம் கொள்ளை நோய்களும் மதக்கலவரங்களும் அகோர முகங்களுடன் அணிவகுத்தன. 1946ல் நடந்த இந்து முஸ்லீம் மதக்கலவரங்கள் கல்கத்தாவை கொலைக்களமாக மாற்றியது.

1946 செப்டம்பர் 10 அன்று தன் ஆன்மீகப் பயிற்சியான வருடாந்திர தியான நிகழ்ச்சியில் பங்கேற்க தெரசா கல்கத்தாவிலிருந்து டார்ஜிலிங் லொரேட்டோ சகோதரியர் இல்லத்திற்கு பயணம் செய்தபோது மக்கள் படும் பாட்டைத் தன் விழிகளில் புகுத்தி இதயத்தில் அமர்த்திக் கொண்டார். சொகுசான லொரேட்டோ மடமல்ல தன் அழைப்பு. வீதிகளில் விதிகளை வரைந்து வாழ்வைத் தொலைத்த வறியவர்க்கே தனது அர்ப்பண வாழ்வு என்பதை முடிவு செய்தார். இந்த நிகழ்வையே பிற்காலத்தில் **அழைப்பினுள் நிகழ்ந்த அழைப்பு** எனக் குறிப்பிடுகிறார். ஆண்டவரின் அழைப்பைக் கேட்டு அவர் வழியில் நடக்க அல்பேனியாவிலிருந்து புறப்பட்ட இந்த ஆன்மீக நதி ஆழ்ந்த சிந்தனையில் குளித்துக் கொண்டது. மணிக்கணக்கில் தன்னை இறைவேண்டலில் கரைத்துக் கொண்டது. இடைவெளி இல்லாமல் தனக்கு வலுவூட்டுகிற நற்கருணையின் முன் அமர்ந்து தொடர் தியானத்தில் ஈடுபட்டது. செபம், தவம், தியானம் என ஆன்மீகக் குளியல் நடத்திய இந்த ஞானப் பறவைக்கு புதிய ஒளியும் வழியும் பிறந்தது. வசதியான வாழ்க்கையை விட்டுவிட்டு ஏழைகளோடு ஏழையாக வாழ்வதே என் அழைப்பு. அதுவே இறைவனின் கட்டளை என்ற உறுதியுடன் லொரேட்டோ துறவறச் சபையை விட்டு வெளியேறி 1948-ல் ஏழைகளுடனான தனது சேவையைத் தொடங்கினார். ஆடம்பரத் துறவற உடையைக் களைந்து நீல கரையிட்ட எளிய வெண்ணிற பருத்தி சேலை அணிந்து இந்த மண்ணின் மகளாகவே மாறி இந்திய ஒன்றியத்தின் குடியுரிமையையும் பெற்று குடிசைப் பகுதிகளில் தன் பணியைத் தொடங்கினார். **சின்னஞ்சிறிய என் சகோதர சகோதரிகளுக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்** என்ற இயேசுவின் வாழ்வியல் வரிகளைத் தன் வேத வரிகளாகக் கொண்டு புதிய பயணத்தைத் தொடங்கினார்.

மோதிஜில் பகுதியில் அவர் தொடங்கிய பணி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அறப்பணியாய் அகிலமெங்கும் ஆல விருட்சமாய் கிளை பரப்பி நிற்கிறது. **மடத்திற்குள் வந்து விட்டோம், மடிகிற வரை இங்கே இருந்து விட்டுப் போகிறோம்** எனும் செயலிழந்த அர்ப்பண வாழ்விற்குள் அடங்கி விடாமல் தன் அழைப்பை உணர்ந்து அழைப்பிற்கேற்ப அர்ப்பண வாழ்வை அமைத்துக் கொண்டு அன்னை தெரசாவாக, அகில உலகம் போற்றும் புனிதையாக பூமியின் தேவதையாக இறைவனால் உயர்த்தப் பெற்ற அன்னை தெரசா 1979-ல் அமைதிக்கான நோபல் பரிசு, 1980ல் இந்திய ஒன்றியத்தின் உயர் விருதான **பாரத ரத்னா** உள்ளிட்ட உலகின் உன்னத விருதுகளையும் பெற்றார். இன்றைக்கும் என்றைக்கும் அர்ப்பண வாழ்வின் அருஞ்சொற்பொருளாய் அன்னை தெரசா திகழ்கிறார் என்பதில் வியப்பில்லை.

நிறுவன நிழலில் இளைப்பாறுவதே இறையழைத்தலின் இலக்கு என்று துறவிகளில் சிலபேர் வாழ்வை வகுத்து வருவது வருத்தத்திற்கு உரிய நிலையாகும். சொர்க்கபுரியாய் சோபித்து நின்ற லொரேட்டோ சபையின் கோட்டைகளுக்குள் தன் அழைப்பு அடங்கி விடக்கூடாது என்ற முனைப்பில் முட்டை ஓட்டை உடைத்து வெளியேறி வெளியுலகைக் காண்கிற கோழிக் குஞ்சைப் போல அன்னை தெரசாவின் ஆன்மீகப் பயணம் அமைந்தது. அதிகார நாற்காலிகளே ஆன்மீக இருக்கைகள் என்று போலியாய் அமைத்திருக்கின்ற கருத்தியல்களை அர்ப்பண வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் உடைக்க வேண்டும். நலிந்தோர் நலம் காக்கும் நற்பணிகளில் ஈடுபடச் சொகுசு மையங்களை விட்டு துறவிகள் வெளியே வரவேண்டும். சேரிகளில் அழுக்காகி கிடக்கிற மானிடச் சமூகத்தை மேம்படுத்த ஆண்டவனின் அழைப்பைப் பெற்றவர்கள் ஆர்த்தெழுந்து வரவேண்டும். மேட்டுக் குடிகளுக்கும் மேனா மினுக்குகளுக்கும் செல்வச் சீமான்களுக்கும் சேவை செய்திட அழைப்புப் பெறவில்லை என்பதை அன்னை தெரசாவிடமிருந்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவின் இறையாட்சி இலக்கு மக்களை உள்ளடக்கியதே என்பதை உணர்ந்து அதிகார நாற்காலிகளை விட்டு விட்டு நிறுவன சொகுசுகளை உதறிவிட்டு உலகை மாற்றும் உறுதியான பணி வாழ்வை முன்னெடுப்பதே காலத்தின் தேவையாகும். திருஅவையின் முதன்மையாகும்.



# தற்கொலைத் தடுப்பு வாயில்காவலர் உயிரைக் காப்பாற்றும் மனிதநேயர்

அருள்முனைவர் **J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்**
இயக்குநர், திருப்புமுனை போதைநோய் நலப்பணி, கோட்டாறு மறைமாவட்டம்.

**அறிமுகம்**

ஒருவர் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன், "ஏன் இப்படிச் செய்தார்?" என்று நாம் கேட்கிறோம். ஆனால் அதைவிட முக்கியமான கேள்வி: "அவர் உயிரோடு இருந்தபோது, அவரது மௌனத்தின் பின்னால் இருந்த வேதனையை யாராவது கவனித்தார்களா?" என்பதாகும். பல நேரங்களில் ஒருவர் திடீரென வாழ்க்கையை வெறுத்துவிடுவதில்லை. முதலில் பேசுவதைக் குறைக்கிறார்; பிறரிடமிருந்து விலகுகிறார்; சிரிப்பையே முகமூடியாக அணிகிறார்; உள்ளே உடைந்துகொண்டிருந்தாலும் வெளியே "நான் நன்றாக இருக்கிறேன்" என்று கூறுகிறார்.

தற்கொலை எண்ணத்தோடு போராடும் ஒருவரின் உள்ளத்தில், "இந்த வேதனையை இனி தாங்க முடியவில்லை" என்ற குரலோடு, "யாராவது என்னைப் புரிந்துகொள்வார்களா?" என்ற சிறிய நம்பிக்கையின் குரலும் இருக்கலாம். அந்த நம்பிக்கையைக் கண்டறிந்து, அவரைப் பாதுகாப்பான உதவியிடம் அழைத்துச் செல்லும் மனிதரே தற்கொலைத் தடுப்பு வாயில்காவலர்.

**தற்கொலை: இறக்க விரும்புவதா? வேதனையிலிருந்து விடுபட விரும்புவதா?**

தற்கொலையை வெறும் "மரண விருப்பம்" என்று மட்டும் புரிந்துகொள்வது தவறு. பல நேரங்களில் ஒருவர் வாழ்க்கையே வேண்டாம் என்று நினைப்பதைவிட, தாம் அனுபவிக்கும் தாங்க முடியாத வேதனையிலிருந்து விடுபடவே ஏங்குகிறார். தனிமை, அவமானம், தோல்வி, உறவு முறிவு, பொருளாதாரச் சுமை, கல்வி அழுத்தம், மனநலப் பிரச்சினை, போதை போன்ற பல காரணிகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நம்பிக்கையின்மையை அதிகரிக்கலாம்.

உலகளவில் ஆண்டுதோறும் ஏழு இலட்சம்பேர் தற்கொலையால் உயிரிழப்பதாகவும், இந்தியாவில் 2023 ஆம் ஆண்டில் 1,71,418 தற்கொலை மரணங்கள் பதிவாகியதாகவும் இணைக்கப்பட்ட ஆவணம் குறிப்பிடுகிறது. ஆனால் ஒவ்வொரு எண்ணுக்கும் பின்னால் ஒரு குடும்பம், ஒரு தாய், ஒரு தந்தை, ஒரு நண்பர், ஒரு காலியான நாற்காலி இருக்கிறது.

**வாயில்காவலர் யார்?**

வாயில்காவலர் மருத்துவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் ஆசிரியராக, பெற்றோராக, நண்பராக, மாணவராக, அருள்பணியாளராக, அருள்சகோதரியாக, சமூகப்பணியாளராக அல்லது ஆற்றுப்படுத்துநராக இருக்கலாம். அவர் சிகிச்சையாளர் அல்ல; ஆனால் சிகிச்சையை அடையச் செய்யும் முதல் மனிதப் பாலம்.

வாயில்காவலரின் பணியை மூன்று எளிய செயல்களில் சொல்லலாம்: கவனித்தல், பதிலளித்தல், இணைத்தல். ஆபத்துக்கான அறிகுறிகளைக் கவனித்து, தீர்ப்பின்றி அன்புடன் பதிலளித்து, பின்னர் நம்பகமான குடும்ப உறுப்பினர், பொறுப்பாளர் அல்லது மனநல உதவியுடன் இணைக்க வேண்டும். "போய்ப் பாருங்கள்" என்பதற்குப் பதிலாக, "நான் உங்களுடன் வருகிறேன்" என்பதே உயிரைக் காக்கும் அணுகுமுறை.

**ஒரு சிறிய கதை: 'நான் கவனித்திருக்க வேண்டும்'**

ஒரு கல்லூரி மாணவன் முன்பு கலகலப்பாக இருந்தான். சில வாரங்களாகப் பேசுவதைக் குறைத்து, வகுப்புக்குத் தனியாகச் செல்லத் தொடங்கினான். ஒருநாள் நண்பனிடம், "எல்லோருக்கும் நான் ஒரு சுமைதான்" என்றான். நண்பனோ, "இதெல்லாம் எல்லாருக்கும் வரும்; நாளைக்குச் சரியாகிவிடும்" என்று சிரித்துவிட்டான். சில நாட்களுக்குப் பிறகு அந்த மாணவன் கடுமையான மனநெருக்கடியில் இருப்பது தெரியவந்தது. குடும்பத்தினரும் நிபுணர்களும் சரியான நேரத்தில் தலையிட்டுப் பாதுகாத்தனர். பின்னர் நண்பன், "அவன் அன்று சொன்னது சாதாரண வார்த்தை அல்ல; உதவிகேட்கும் குரல் என்று இப்போது புரிந்துகொண்டேன்" என்றான்.

**சிந்தித்துப் பார்ப்போம்**

நம்மைச் சுற்றித் திடீரென அமைதியான ஒருவர் இருக்கிறாரா? மகிழ்ச்சியாக இருந்தவர் தனிமையை நாடுகிறாரா? "நான் இல்லாமல் இருந்தால் நல்லது" என்று யாராவது சொல்லியிருக்கிறார்களா? அந்த வார்த்தைகளை நாம் சாதாரணமாகத் தள்ளிவிட்டோமா? இத்தகைய கேள்விகளிலிருந்துதான் வாயில்காவலரின் விழிப்புணர்வு தொடங்குகிறது.

**மௌனம் பேசும் எச்சரிக்கை அறிகுறிகள்**

"எனக்கு வாழ விருப்பமில்லை", "நான் சுமை", "எல்லாம் முடிந்துவிட்டது", "எனக்காக யாரும் இல்லை" போன்ற வார்த்தைகள்; திடீர்த் தனிமை; விருப்பமான செயல்களில் ஆர்வம் இழத்தல்; முக்கியமான பொருட்களை மற்றவர்களுக்கு வழங்குதல்; கடுமையான நம்பிக்கையின்மை; விடைபெறுவதைப் போன்ற சமூக ஊடகப் பதிவுகள்; எதிர்பாராத உணர்ச்சி மாற்றங்கள் ஆகியவற்றை அலட்சியம் செய்யக்கூடாது.

கடும் அவமானம், குற்ற உணர்வு, கோபம், வெறுமை, பதற்றம், அமைதியின்மை, உணர்ச்சிச் சோர்வு போன்றவையும் எச்சரிக்கை அறிகுறிகளாக இருக்கலாம். குழந்தைகளும் இளையோரும் "என்னை யாரும் விரும்பவில்லை", "நான் பயனற்றவன்" போன்ற வார்த்தைகள் வழியாகத் தங்கள் வலியை வெளிப்படுத்தலாம். அமைதியாக இருப்பவர் எப்போதும் பாதுகாப்பாக இருப்பவர் அல்ல; சில நேரங்களில் மௌனமே உதவி கேட்கும் மொழியாகும்.

**தற்கொலை பற்றி நேராகக் கேட்கலாமா?**

"தற்கொலை பற்றிக் கேட்டால் அந்த எண்ணத்தை அவர்களிடம் உருவாக்கிவிடுமோ?" என்ற பயம் பலரிடம் இருக்கிறது. ஆனால் ஒருவர் தீவிரமான வேதனையில் இருப்பதாகத் தோன்றினால், அன்புடனும் அமைதியாகவும் நேராகக் கேட்பது ஆபத்தை உருவாக்குவதில்லை; மாறாக ஏற்கெனவே இருக்கும் ஆபத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவர உதவலாம்.

"நீங்கள் மிகவும் வேதனையில் இருப்பதுபோல் தெரிகிறது. உங்களுக்கு வாழ வேண்டாம் என்ற எண்ணம் வருகிறதா?" என்று கேட்கலாம். அவர் "ஆம்" என்றால் பயப்படவோ, கோபப்படவோ, உடனே அறிவுரை சொல்லவோ கூடாது. முதலில் அவர் பேசுவதற்கு இடமளிக்க வேண்டும். கேள்வி கதவைத் திறக்கலாம்; மௌனம் அந்தக் கதவை மூடிவிடலாம்.

**அறிவுரையைவிட அன்புடன் கேட்பது**

ஒருவர் தன் வேதனையைப் பகிரும்போது, "இதெல்லாம் ஒரு பிரச்சினையா?", "தைரியமாக இருங்கள்", "மற்றவர்களுக்கு இதைவிடப் பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன", "மறந்துவிடுங்கள்" என்று நாம் எளிதாகச் சொல்லிவிடுகிறோம். நல்ல எண்ணத்துடன் சொல்லப்பட்டாலும், இவை அவரது வேதனையைச் சிறுமைப்படுத்தலாம். அவர் முதலில் எதிர்பார்ப்பது தீர்வு அல்ல; பாதுகாப்பாகக் கேட்கும் ஒரு மனிதர்.

கருணையுடன் கேட்பது என்பது இடைமறிக்காமல், ஒப்பிடாமல், தீர்ப்பிடாமல், கேட்பதாகும். கார்ல் ரோஜர்ஸின் மனிதநேய உளவியல் நினைவூட்டுவதுபோல், ஒருவர் உண்மையாகக் கேட்கப்படும்போது அவர் தன்னையே புதிதாகக் கேட்கத் தொடங்குகிறார். சில நேரங்களில் உயிரைக் காப்பாற்றும் முதல் மருந்து மனித உறவாகவே இருக்கிறது.

**உயிரைக் காக்கும் ஐந்து மனிதநேயச் செயல்கள்**

வாயில்காவலரின் செயல்களை ஐந்து சொற்களில் நினைவில் வைத்துக்கொள்ளலாம்: கவனி, அணுகு, கேள், உடனிரு, இணை. வார்த்தை, நடத்தை, உணர்ச்சி, சமூக ஊடக மாற்றங்களைக் கவனிக்க வேண்டும். "நான் உங்களைப் பற்றிக் கவலைப்படுகிறேன்" என்று அன்புடன் அணுக வேண்டும். தற்கொலை எண்ணம் உள்ளதா என்று மென்மையாகவும் நேராகவும் கேட்க வேண்டும். உடனடி ஆபத்து இருந்தால் அந்த நபரைத் தனியாக விடாமல் பாதுகாக்க வேண்டும். பின்னர் குடும்பம், பொறுப்பாளர், மனநல நிபுணர் அல்லது அவசர உதவியுடன் உடனடியாக இணைக்க வேண்டும். உயிருக்கு ஆபத்து இருக்கும்போது, உயிரின் பாதுகாப்பு ரகசியத்தைவிட முதன்மையானது.

**'நான் உங்களுடன் வருகிறேன்' 'உயிரூட்டும் சொற்கள்**

"ஒரு மனநல நிபுணரைப் பாருங்கள்" என்று சொல்வதற்கும், "வாருங்கள்; நான் உங்களுடன் வருகிறேன்" என்று சொல்வதற்கும் பெரிய வேறுபாடு உள்ளது. முதல் வாக்கியம் வழியைக் காட்டுகிறது; இரண்டாவது வாக்கியம் வழியில் உடன் நடக்கிறது. வாயில்காவலர் எல்லாப் பிரச்சினைகளையும் தானே தீர்க்க வேண்டியதில்லை. சரியான உதவி கிடைக்கும் வரை மனிதப் பாலமாக இருந்தால் போதும். உதவி கேட்பது பலவீனம் அல்ல; உயிரைப் பாதுகாக்கும் துணிச்சலான செயல் என்பதை சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

**இன்னொரு கதை: ஒரு தொலைபேசி அழைப்பு**

ஒரு இளம் பெண் இரவு நேரத்தில் தனது தோழிக்குச் சமூக ஊடகத்தில், "எல்லாவற்றுக்கும் நன்றி" என்று பதிவிட்டாள். அதைப் பார்த்த தோழி ஒரு குறியீடு மட்டும் அனுப்பாமல் உடனே தொலைபேசியில் அழைத்தாள். பதில் இல்லாததால் மீண்டும் அழைத்தாள்; பின்னர் அருகிலிருந்த நம்பகமானவரைத் தொடர்புகொண்டாள். அந்தப் பெண் கடுமையான மனநெருக்கடியில் இருப்பது தெரியவந்து, சரியான நேரத்தில் உதவி கிடைத்தது.

சமூக ஊடகத்தில் "பார்த்துவிட்டேன்" என்ற பதிவு அல்லது சோகக் குறியீடு மட்டும் போதாது. நேரடித் தொடர்பு, தொலைபேசி அழைப்பு, அருகிலுள்ள நம்பகமான மனிதரை அணுகுதல் போன்ற சிறிய செயல்கள்கூட உயிரைக் காக்கும் செயல்களாக மாறலாம்.

**பள்ளியும் கல்லூரியும் உயிரைக் காக்கும் இடங்களாகட்டும்**

மாணவர்கள் பெற்றோரிடமோ ஆசிரியர்களிடமோ சொல்ல முடியாததை நண்பர்களிடம் பகிரலாம். "என்னால் முடியவில்லை", "நான் சுமை", "வாழப் பிடிக்கவில்லை" போன்ற வார்த்தைகள் முதலில் நண்பர் வட்டத்திலேயே வெளிப்படலாம். எனவே மாணவர் வழிகாட்டிகள், நண்பர் ஆதரவுக் குழுக்கள், ஆசிரியர்கள், விடுதிக் காப்பாளர்கள் ஆகியோருக்கு வாயில்காவலர் பயிற்சி மிகவும் அவசியம்.

தேர்வில் தோல்வி வரலாம்; காதல் உறவு முறியலாம்; வேலை கிடைக்காமல் போகலாம்; ஒரு கனவு தாமதமாகலாம். ஆனால் ஒரு தேர்வின் முடிவு வாழ்க்கையின் முடிவல்ல; ஒரு தோல்வி மனிதரின் மதிப்பைத் தீர்மானிப்பதில்லை. பள்ளிகளும் கல்லூரிகளும் மதிப்பெண்களை உருவாக்கும் இடங்களாக இல்லாமல், உயிர்களைப் பாதுகாக்கும் இடங்களாக மாற வேண்டும்.

**வாயில்காவலரும் மனிதர்தான்**

மற்றவர்களின் ஆழமான வேதனையைக் கேட்பது வாயில்காவலரையும் பாதிக்கலாம். குறிப்பாகத் தற்கொலை முயற்சி அல்லது மரணம் தொடர்பான அனுபவத்திற்குப் பிறகு குற்றஉணர்வு, உதவியற்ற நிலை, மனஅதிர்ச்சி போன்ற உணர்வுகள் தோன்றலாம். எனவே வாயில்காவலரும் தேவையானபோது தன் அனுபவங்களைப் பகிர ஆற்றுப்படுத்துதல் பெற வேண்டும். "உயிரைக் காக்கும் மனிதரும் காக்கப்பட வேண்டும்". ஒரு விளக்கு மற்றொரு விளக்கை ஏற்ற முடியும்; ஆனால் தொடர்ந்து ஒளிர அந்த விளக்கையும் பராமரிக்க வேண்டும்.

**நம் மனச்சாட்சிக்கான சில கேள்விகள்**

நம்முடன் வாழும் மனிதர்களின் முகங்களை மட்டும் பார்க்கிறோமா, அவர்களின் மனங்களையும் பார்க்கிறோமா? "நான் நன்றாக இருக்கிறேன்" என்று ஒருவர் சொன்னவுடன் நம்பிவிடுகிறோமா, அல்லது அவரது குரலில் மறைந்திருக்கும் சோகத்தையும் கேட்கிறோமா? ஒருவர் வேதனையைப் பகிரும்போது அறிவுரை சொல்ல அவசரப்படுகிறோமா, அல்லது அவருடன் அமைதியாக அமர்ந்து கேட்கிறோமா? என் குடும்பத்தில், என் வகுப்பறையில், என் பணியிடத்தில், என் சமூகத்தில் நான் யாருக்காவது வாயில்காவலராக இருக்க முடியுமா?

**ஒரு வாயில்காவலரின் உறுதிமொழி**

நான் உயிரைக் கவனிப்பேன். மௌனத்தின் பின்னால் இருக்கும் வேதனையை அலட்சியம் செய்யமாட்டேன். கருணையுடன் கேட்பேன்; தீர்ப்பிடாமல், அவமானப்படுத்தாமல், ஒப்பிடாமல் கேட்பேன். உயிருக்கு ஆபத்து இருக்கலாம் என்று தோன்றினால் நேராகக் கேட்கத் தயங்கமாட்டேன். அவசரமான சூழலில் அவரைத் தனியாக விடாமல், உயிரின் பாதுகாப்பை முதன்மைப்படுத்துவேன். "நீங்களே போங்கள்" என்று சொல்லாமல், "நாம் சேர்ந்து உதவி பெறுவோம்" என்று சரியான உதவியுடன் இணைத்து உடன் நடப்பேன்.

**முடிவுரை**

ஒரு உயிரைக் காப்பாற்ற எப்போதும் பெரிய சாதனை செய்ய வேண்டியதில்லை. சில நேரங்களில், "நீங்கள் இன்று சரியாக இல்லைபோல் இருக்கிறதே?" என்ற ஒரு கேள்வியை அருகில் அமர்ந்து கேட்பது போதும். "நான் இருக்கிறேன்" என்று சொல்வது போதும். தேவையான நேரத்தில் சரியான உதவியுடன் இணைப்பது போதும். நாம் ஒருவரின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால் அவர் தனது பிரச்சினையைத் தனியாகச் சந்திக்க வேண்டியதில்லை என்பதை உணர்த்த முடியும்.. "ஒருவரின் வாழ்க்கையில் நீங்கள் ஒரு சிறிய மனிதராக இருக்கலாம்; ஆனால் அவர் இருளில் நிற்கும் ஒரு தருணத்தில், நீங்கள் அவருக்குத் தெரியும் ஒரே வெளிச்சமாக இருக்கலாம்." கவனிப்போம்! கேட்போம்! உடனிருப்போம்! உதவியுடன் இணைப்போம்! உயிரைக் காப்போம்!



# கடவுள் தந்த கொடை
## கன்னி மரியாவின் பிறப்பு

அருள்பணி. **வ. இரபேல்**

அன்னை மரியாவின் பிறப்பு விழா செப்டம்பர் 8ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. நற்செய்தி நூல்கள் அன்னை மரியாவின் பிறப்பைக் குறித்து எதுவும் சொல்லாவிடினும், திருச்சபை பல நூற்றாண்டுகளாக இந்த விழாவைக் கொண்டாடி, மீட்பின் அன்னையாக இருப்பதற்குக் கடவுளால் தேர்ந்துக்கொள்ளப்பெற்ற மரியா என்னும் பெண்ணுக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறது.

மனிதர் ஒவ்வொருவரின் பிறப்பும் எதிர்நோக்கின் தருணமாகும். மரியாவின் பிறப்பிலோ, திருச்சபை மீட்பு வரலாற்றின் ஒரு தனித்துவமான அத்தியாயத்தைக் காண்கிறது. கடவுளின் மகனாம் இயேசு கிறிஸ்துவின் அன்னையாக மாறுவதற்காக மரியா இவ்வுலகில் பிறந்தார். கபிரியேல் தூதர் முன்னிலையில், "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று மரியா சொன்னதால் மீட்புத்திட்டம் மனித வரலாற்றில் நுழைந்தது. ஆகவே, மரியாவின் பிறப்பு என்பது உலகின் ஒளியாம் கிறிஸ்துவின் வருகையைச் சுட்டி நிற்கின்றது.

### கடவுளால் தேர்ந்துக்கொள்ளப்பெற்ற மகள்

மரியாவின் மேன்மை உலகியல் ஆற்றலாலோ செல்வத்தாலோ பதவி நிலையாலோ வந்ததன்று. அவர் இறைநம்பிக்கையுடனும் கீழ்ப்படிதலுடனும் நாசரேத்தில் வாழ்ந்த எளிய பெண். இருப்பினும், கடவுள் அவரை அளவிலா முக்கியத்துவம் வாய்ந்த பணி ஒன்றுக்காகத் தேர்ந்தெடுத்தார். கபிரியேல் தூதரும், "அருள்மிகப் பெற்றவரே" என வாழ்த்தி, அவர் கடவுளின் மகனுக்குத் தாயாகவிருப்பதை அறிவித்தார்.

கடவுள் பல நேரங்களில். சிறியதாகவும் மறைவானதாகவும் இருக்கும் வழிகளில்தான் தம்முடைய பெரும் செயல்களைத் தொடங்குகிறார் என்பதை மரியாவின் பிறப்பு நமக்கு உணர்த்துகிறது. சாதாரணக் குடும்பம் ஒன்றில் பிறந்த இந்தக் குழந்தை மானிட இனத்தின் மீட்புக்காக அந்த மீட்பின் மையமாக ஒருநாள் மாறும். இவ்வுலகில் ஒவ்வொருவர் வாழ்வும் மாண்புடையதாகவும் நோக்கம் கொண்டதாகவும் விளங்குகிறது என்பதை மரியாவின் வாழ்வு நமக்கு உணர்த்துகிறது. கடவுளின் கையில் ஒருவர் தம்முடைய வாழ்வை அர்ப்பணித்துவிட்டால், அந்த ஆள் வழியாகக் கடவுள் அசாதாரணமான காரியங்களைச் செய்துமுடிக்க முடியும் என்பதையும் மரியாவின் வாழ்வு நமக்குக் கற்றுத்தருகிறது.

### மரியாவும் மீட்பின் மறைபொருளும்

மரியாவின் பிறப்பு கடவுள் மனிதராதல் என்னும் மறைபொருளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. இயேசுவின் அன்னையாக இருப்பதற்கு மரியா கடவுளால் தயாரிக்கப்பட்டார். கால நிறைவில் மரியா கடவுளின் வார்த்தையைத் தம் வயிற்றில் ஏற்றுக்கொண்டு, அவருக்கு மனித இயல்பை வழங்கினார். மரியா வழியாகவே மீட்பர் நம்முடைய உலகில் நுழைந்தார்.

எனவே, மரியாவின் பிறப்பைக் கொண்டாடுவது என்பது கடவுளின்

பிரமாணிக்கத்தைக் கொண்டாடுவது ஆகும். வரலாறு முழுவதும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இயேசுவில் நிறைவேறிட நகர்ந்து கொண்டிருந்தன. பழைய உடன்படிக்கையின் எதிர்பார்ப்புக்கும் இயேசு கொண்டுவந்த நிறைவேற்றத்திற்கும் நடுவே மரியா நிற்கிறார்.

கதிரவன் உதயத்தில் வரும் முதல் வெளிச்சம்போல் அன்னை மரியா உள்ளார். விடியற்காலம் என்பது பகலின் முழு வெளிச்சத்தைக் கொண்டிருப்பதன்று. மாறாக, அது பகலின் வருகையை அறிவிப்பதாகும். அதுபோலவே, மரியாவின் பிறப்பும் கிறிஸ்துவின் வருகையை அறிவிக்கிறது.

## நம்பிக்கைக்கும் கீழ்ப்படிதலுக்கும் மாதிரி

மரியாவின் வாழ்வு கிறிஸ்தவர் ஒவ்வொருவருக்கும் வலுவான படிப்பினையைத் தருகிறது. வானதூதர் கடவுளின் திட்டத்தை அறிவித்தபோது மரியா முழுமையான விளக்கத்தையோ ஆதாரத்தையோ கோரவில்லை. அவர் தாழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தார். அது ஒரு கண நேரத்துப் பதிலன்று. அதுவே அவரது வாழ்வு முழுவதையும் வழிநடத்தும் நெறியாக இருந்தது. மரியா மகிழ்வையும் துயரையும் அடைந்தார். அவர் மரியாதையையும் புரிந்துகொள்ளமையையும் சந்தித்தார். அவர் பெத்லகேமின் வியப்பையும் கல்வாரியின் வேதனையையும் ஏற்றுக்கொண்டார். ஒவ்வொரு கட்டத்திலும் மரியா கடவுளுக்கு உண்மையுள்ளவராக விளங்கினார். புனித இரேனியு மரியாவைப் புதிய ஏவாளாகக் குறிப்பிடுகிறார். மரியாவின் கீழ்ப்படிதலையும் ஏவாளின் கீழ்ப்படியாமையையும் ஒப்புமைப்படுத்தும் இரனேயு, "ஏவாளின் கிழ்ப்படியாமை என்னும் முடிச்சு மரியாவின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது" என எழுதுகிறார். "கன்னியான ஏவாள் நம்பிக்கையின்மையால் கட்டிப்போட்டதைக் கன்னி மரியா தம்முடைய நம்பிக்கையால் விடுவித்துவிட்டார்" என அவர் எழுதுகிறார்.

எனவே, மரியாவின் பிறப்பு கடவுளின் அழைப்புக்கு நாம் கொடுக்கும் பதிலைக் குறித்துச் சிந்தித்திட நம்மை அழைக்கிறது. உலகின் பார்வைக்கு அசாதாரணமான காரியங்களைச் செய்வதற்கு அவர் நம்மை அழைப்பதில்லை. நாம் நம்முடைய குடும்பங்களிலும், தொழிலிடங்களிலும், சமூகங்களிலும் நேர்மையும் உண்மையும் உள்ளவர்களாக இருப்பதற்கு நம்மை அழைக்கிறார். நாம் செல்ல வேண்டிய பாதை நமக்குத் தெளிவாகத் தெரியாவிடினும், மரியாவைப்போல நாம் இறைவனை நம்ப வேண்டும்.

## எதிர்நோக்கின் விழா

மரியாவின் பிறப்பு என்பது நமக்கு எதிர்நோக்கின் விழாவாக அமைந்துள்ளது. கடவுளின் திட்டங்கள் நம் கண்களுக்கு மறைவாக இருந்தாலும் அவர் எப்போதும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை மரியாவின் பிறப்பு நமக்குச் சொல்கிறது. சாதாரண பிறப்பாகத் தோன்றிய ஒன்று, மீட்பரின் வருகைக்கான தயாரிப்பின் ஒரு பாகமாக மலர்ந்துவிட்டது.

## மரியாவின் பிறப்பும் நம்முடைய பிறப்பும்

மரியாவின் பிறப்பைக் கொண்டாடுவது நம்முடைய பிறப்பின் பொருளை நாம் சந்தித்திட நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஒவ்வொருவரின் பிறப்பும் கடவுளிடமிருநச்து வரும் கொடையாகும். நாம் பொருளற்ற உயிரினங்கள் அல்லர். நாம் ஒவ்வொருவருமே கடவுளின் அறிவுக்கு உட்பட்டவர்களாகவும், அவரால் அன்பு செய்யப்படுபவர்களாகவும் உள்ளோம். கடவுள் சாதாரணமான மனித வாழ்வை எடுத்து, அதை அசாதாரணமான அருளின் வாழ்வாக மாற்ற முடியும் என்பதை அன்னை மரியாவின் பிறப்பு நமக்குச் சொல்கிறது. அன்னை மரியாவைப்போலக் கடவுளின் திட்டத்திற்கு நாம் நம்மை அர்ப்பணிக்கும்போது அது நிறைவேற்றம் பெறுகிறது.



## உலக மூத்த குடிமக்கள் தினம்

# என்றும் சுகமா?

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

1988-இல் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் கையெழுத்திட்ட பிரகடனத்தின் விதையால் 1991- முதல் விழாவாக மலர்ந்ததுதான் உலக மூத்த குடிமக்கள் தினம். இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 21-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. முதியோரின் வாழ்நாள் சாதனைகளைப் போற்றவும், அவர்களின் உடல்நலக் குறைவு, தனிமை, புறக்கணிப்பு போன்ற வலிகளை உலகுக்கு நினைவூட்டவும், அவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் வழங்கும் கடமையை நமக்கு நினைவூட்டவும் பிறந்ததே இந்நாள். திருஅவை இந்த அன்பின் அழைப்பை இன்னும் ஆழமாக ஏற்றுக்கொண்டது. எனவே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2021-இல் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமையை உலகத் தாத்தா-பாட்டிகள் மற்றும் முதியோர் நாளாகக் கொண்டாட அழைப்பு விடுத்தார். இவ்வாண்டு (2026) அந்த தினம் புனிதர்களான சுவக்கீன், அன்னா திருவிழாவையொட்டி கொண்டாடப்பட்டது.

**முதுமை - சுகமா? சுமையா?**

திருத்தந்தை பதினான்காம் லியோ இவ்வாண்டுக்கான மையக்கருத்தாக, "நான் உன்னை மறக்கவே மாட்டேன்" என்கிற எசாயாவின் (49:15) இறைவார்த்தையைத் தேர்ந்தெடுத்தார். முதுமை என்பது ஆன்மீக ஓய்வுக்காலம் அல்லது அது இறைவன் அளிக்கும் ஓர் அழைப்பு என்றார். அவ்விதமே, பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வுக்கான திருப்பீடத்துறையின் முதியோர் மேய்ப்புப் பணியின் பொறுப்பாளர் வித்தோரியோ ஸ்கெல்சோ குறிப்பிடுகையில், "முதியவர்கள் சுமை அல்ல. பேணிப் பாதுகாக்க வேண்டிய இறைவனின் கொடை" என்றார். இவ்வுண்மையை திருஅவையின் அண்மைக்கால ஏடுகள் இன்னும் ஆழமாக வலியுறுத்துகின்றன.



"அன்பின் மகிழ்ச்சி" என்ற திருத்தூது ஊக்கவுரையில் (எண்கள் 191-193) திருத்தந்தை பிரான்சிஸ், முதியோரைக் குடும்பத்தின் "உயிருள்ள நினைவகம்", நம்பிக்கையைத் தலைமுறைக்குத் தலைமுறை கடத்தும் விலைமதிப்பற்ற பாலங்கள். அவர்களின் இருப்பே குடும்பத்தை வலுப்படுத்துகிறது. அவர்களை ஒதுக்குவது குடும்பத்தின் வேர்களை அறுப்பதற்குச் சமம் என்கிறார். நரம்பியல் விஞ்ஞானி எல்கோனோன் கோல்ட்பெர்க் தனது ஆய்வில், "முதிர்ச்சி இழப்புகளுடன் லாபங்களையும் தருகிறது.

முதுமையில் நினைவாற்றல் குறைந்து கவனம் சிதறலாம்; ஆனால் ஞானம் வளரும் தானே!" என்கிறார். "முதிர் வயதிலும் கனிதருவர்" (திபா 92:14) என்று திருப்பாடல் ஆசிரியர் சொல்வதும் இதனால் தானே!

**இந்நாள் ஏன் மிகவும் தேவைப்படுகிறது?**

நவீன உலகின் "தூக்கி எறியும் கலாச்சாரம்" முதியோரை எளிதில் ஒதுக்கி வைக்கிறது. வேகத்தின் சுழலில் சிக்கிய நாம், "நேரமில்லாத சுமை" என்று எண்ணி அவர்களைத் தள்ளி வைக்கும் போக்கு அதிகரித்து வருகிறது. ஆனால் ஓர் உண்மையை மறந்து விடக்கூடாது. முதியோர் வெறும் கடந்த காலத்தின் நிழல்கள் அல்ல. நம் வேர்களைத் தாங்கும் பழமையான மரங்கள். அவர்களின் சுருக்கங்கள் ஒவ்வொன்றும் வாழ்க்கை எழுதிய புனிதக் கதைகள். அவர்களின் கண்களில் சேமிக்கப்பட்டிருக்கும் அனுபவச் செல்வம், நம் இளம் தலைமுறைக்குத் தேவையான ஞானத்தின் நூலகம்.

கடந்த காலங்களை ஒப்பிடுகையில் இன்று ரீல்ஸ் மோகத்தில் தாத்தா பாட்டிகளுடன் நெருக்கம் காட்டும் பேரப்பிள்ளைகளைப் பார்க்க முடிகிறது. திருஅவை படிப்பினைகளின் தாக்கமாய் மறைமாவட்டம், வட்டாரம் மற்றும் பங்குத்தளங்களில் முதியோர் தினங்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதும் பாரட்டுதற்குரியதே. இருப்பினும் இந்தத் தினத்தை வெறும் வாழ்த்துச் செய்திகளோடு நிறைவு செய்யாமல், அர்த்தமுள்ளதாக மாற்ற அன்றாடம் நாம் என்ன செய்யலாம்?

ஒரு வயதான மரம் நிழல் தருவது போல, நாமும் முதியவர்களுக்கு நிழலாக இருப்போம். முடிந்தளவிற்கு முதிர்வயது பெற்றோர்களைக் கூடவே வைத்திருப்போம். நாமும் முதுமையடைந்து நம் பிள்ளைகள் நம்மைத் தனித்துவிடாமல் இருக்க அவர்களுக்கு இது சிறந்த படிப்பினையாகும். ஒருவேளை வேலை நிமிர்த்தம் வெளியூரில் வசிப்பின் அல்லது தனி வீட்டில் வசிப்பின் வாரத்திற்கு குறைந்தது ஒருமுறையாவது அவர்களை நேரில் சந்தித்துக் கைகளைப் பற்றிப்பிடித்துப் பேசுவோம். பேச எதுவுமில்லையெனில் உடனிருப்போம். அவர்கள் பேசுவதற்குச் செவிமடுப்போம். தொலைபேசி அழைப்பு மட்டும் போதாது. கண் பார்த்துப் பேசும் அன்புதான் தனிமையின் சுவர்களை உடைக்கும்.

இன்றைய "டிஜிட்டல்" கலாச்சாரத்தில் இணைப்பு எளிது. ஆனால் உண்மையான தொடர்பு குறைவு. எனவே பாட்டியின் கதைகள், தாத்தாவின் பாடல்கள் வளரிளம் பருவத்தினரின் காதுகளில் விதைக்கப்படும் விதமாய் குடும்பங்களில் தலைமுறைகளை இணைக்கும் நிகழ்ச்சிகளை அவ்வப்போது ஏற்பாடு செய்வோம். உறவுமுறைகளைக் கற்றுக்கொடுப்போம். முதியோர் மீண்டும் குழந்தைகள் என்பதனைப் புரிந்து கொள்வோம். அவர்களின் குறைபாடுதல்கள், புலம்பல்களை பெரிதுப்படுத்துவதோ அல்லது குழந்தைகளின் முன் அவர்களைக் குறித்து தரக்குறைவாகப் பேசுவதையோ முற்றிலும் தவிர்ப்போம். குழந்தைகள் பாட்டி தாத்தாக்களுடன் கொஞ்சிப் பேசி விளையாட அனுமதிப்போம்.

பங்குகளில் முதியோரை மறைப்பணியின் முக்கியப் பங்காளிகளாக ஏற்றுக்கொள்வோம். அவர்களின் செபம் உலக அமைதிக்கான வலிமையான ஆயுதம் என்பதை நினைவூட்டுவோம். நோயுற்றவர்கள், வீட்டை விட்டு வெளியேற முடியாதவர்கள், தனிமையில் வாழ்பவர்கள் யாரும் புறக்கணிக்கப்படாதவாறு இல்லங்களுக்குச் சென்று இறைவனின் அன்பைச் செயலில் காட்டுவோம். அதற்காகப் பங்களவில் மாதத்திற்கு ஒருமுறை முதியவர்கள் ஒன்றுகூடி வரும்விதமான அமைப்பு வழிமுறைகளை மேற்கொள்வோம். முதியவர்கள் சுமை அல்ல. அவர்கள் இறைவன் நமக்கு அளித்த விலைமதிப்பற்ற கொடை. அவர்களைப் பேணிப் பாதுகாப்பது நம் கடமை மட்டுமல்ல. அது நம் மனிதத் தன்மையின் அளவுகோல். முதியோரை மதித்துப் போற்றும் குடும்பத்திற்குத்தான் உண்மையான எதிர்காலம் உண்டு!



# காணாமல் போனவர்கள்

பரக்குன்று **சேவியர்**

ஒவ்வொரு ஆண்டு ஆகஸ்ட் 30ம் தியதியை, உலகக் காணாமல் போனோர் தினம், என அழைத்து உலகம் அவர்களை நினைவு கூர்கிறது.

உலகெங்கும் மக்கள் தினம் தோறும் காணாமல் போய்க்கொண்டே இருக்கிறார்கள். யுத்தங்களின் வன்மத்தினால் தங்கள் வாழ்க்கையைப் போர்க்களங்களில் தொலைத்துவிட்டுக் காணாமல் போனவர்கள் இருக்கிறார்கள். அரசியல் வன்முறைகளினால் காணாமல் போனவர்கள் இருக்கிறார்கள். புலம் பெயர்ந்து போய் களம் இழந்தவர்கள் இருக்கிறார்கள். சிறைக்கதவுகளுக்குள் மாயமாய் மறைந்தவர்கள் இருக்கிறார்கள். ஏழ்மையின் படுகுழிக்குள் விழுந்து கரையேற முடியாமல் கரைந்து போனவர்கள் இருக்கிறார்கள்.

இன்னும் சாதீய வன்முறைகள், இனப் படுகொலைகள், மதக்கலவரங்கள், எல்லைப் போராட்டங்கள் என எத்தனையோ வழிகளில் மனிதர்கள் காணாமல் போய்க்கொண்டே இருக்கிறார்கள்.

காணாமல் போனவர்கள் விட்டுச் சென்ற காலடித் தடங்களில் மௌனம் மட்டுமே உறங்கிக் கொண்டிருக்கிறது. காணாமல் போவது, இறந்து போவதை விடக் கொடுமையானது. அவர்களின் அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. அவர்களுடைய நினைவுகள் மறக்கப்படுகின்றன. அவர்களுடைய பெயர் வரலாற்றிலிருந்து நீக்கப்படுகிறது.

வாழ்க்கையின் மிகப்பெரும் துயரம் மரணமாய் இருக்க வேண்டுமென்பதில்லை. வலுக்கட்டாயமாய் நம்மை உலகின் பக்கங்களிலிருந்து அப்புறப்படுத்துவதாகவும் இருக்கலாம்.

எத்தனையோ அம்மாக்கள் தொலைந்து போன பிள்ளைகளுக்காய்த் தாழ்ப்பாள் இடாத கதவுடன் காத்திருக்கிறார்கள்.

எத்தனையோ தந்தையர் தெருமுனைகளிலும், பேருந்து நிலையங்களிலும் வெறித்துக் கிடக்கிறார்கள்.

எத்தனையோ பிள்ளைகள் எதிர்காலத்தைத் தொலைத்து விட்டு பெற்றோர்களுக்காய் ஏங்குகின்றனர்.

காலம் எல்லாவற்றையும் ஆற்றுவதில்லை. சில கேள்விகளுக்கான பதில்களை வரலாறு எப்போதுமே வழங்குவதில்லை.

தொலைந்து போகும் மனிதர்கள் எல்லாமே சில வெற்றிடங்களை விட்டுச் செல்கின்றனர். அவர்களுடைய அன்பின்



குடும்பங்கள் நெருப்பில் நாட்களை நகர்த்துகின்றன. நமக்குத் தொலைந்து போனவர்கள் வெறும் எண்கள் மட்டுமே. புள்ளி விவரங்கள் மட்டுமே. ஆனால் குடும்பங்களுக்கு தான் அது ஒரு காலியான இருக்கை, ஒரு கொண்டாடப்படாத பிறந்த நாள், கண்ணீரால் ஈரமான புகைப்படம் என நீளும்.

புலம் பெயர்ந்தவர்களின் வலி எளிதில் புரியாது. அவர்கள் விட்டு வந்த வீட்டின் கதைகளை அவர்கள் மீண்டும் ஒரு முறை கேட்கவே முடியாமல் போகலாம். குதூகலமாய் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் குவாரிகளில் கல் உடைக்கலாம். தோழிகளோடு

சிரித்துத் திரிந்த பதின் வயது பெண் எல்லைகளில் கடத்தப்படலாம். இவர்கள் புலம் பெயர்தலை விரும்பி ஏற்பதில்லை. சமூகம் அவர்களை விரும்பாததால், ஏற்கிறார்கள்.

ஒவ்வொரு புலம் பெயர்தலுக்குப் பின்னும் அன்பு செய்ய மறுக்கும் ஒரு சமூகம் உண்டு. காணாமல் போகும் மக்களின் பின்னால் ஆதரவு காட்ட மறுக்கும் ஒரு அரசு உண்டு.

இன அழிப்புகள் இந்த நூற்றாண்டின் சாபக்கேடுகள். அவை வெறுமனே மனிதர்களைக் கொல்வதில்லை, அப்படி ஒரு இனம் இருந்ததே தெரியாத அளவுக்கு வேரோடு அழித்து ஒழிக்கிறது. மொழிகள் கொல்லப்படும். கலாச்சாரங்கள் எரிக்கப்படும். புனித இடங்கள் புதைக்கப்படும். வரலாறுகள் குருதியுடன் மாற்றி எழுதப்படும். அடுத்த தலைமுறைக்கு தங்கள் இனத்தின் நீட்சியோ, பாரம்பரியத்தின் மாட்சியோ தெரியாமலேயே போய்விடும்.

சமூகத்தின் மிகப்பெரிய பாவம், மக்களை மறந்து விடுவது தான். மறக்கடிக்கப்படுவதே அநீதிக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வெற்றியாகும். அதனால் தான் அதிகாரமும், ஆதிக்கமும் நினைவூட்டலை வெறுக்கின்றன. நினைவூட்டும் வாய்களைப் பூட்டுகின்றன. நினைவூட்டும் குரல்வளைகளை நெரிக்கின்றன.

இறைவன் மறந்து போனவர்களை மறக்கவில்லை. புறக்கணிக்கப்பட்டவர்களைப் புறந்தள்ளவில்லை. மாறாக விவிலியம் முழுவதும் இறைவன் தன்னை அத்தகையவரோடு தான் அடையாளப்படுத்துகின்றார். ஒடுக்கப்பட்டோரோடு, வழிப்போக்கரோடு, விதவைகளோடு, ஊனமுற்றோரோடு, ஏழைகளோடு இப்படி சமூகம் யாரையெல்லாம் மறக்க நினைக்கிறதோ அவர்களோடு தன்னை அடையாளப்படுத்தி, ஆயுள் முழுவதும் அவர்களை நினைவில் நிறுத்தி வைக்கிறார்.

தெய்வீக நீதி என்பது வலிமையான ஆற்றலில் மட்டுமல்ல, வலிமையற்றவர்களை எப்படித் தேற்றுகிறோம் என்பதிலும் இருக்கிறது!

இயேசு இந்த சித்தாந்தத்தையே சுமந்து திரிந்தார். தொலைந்து போன ஒரே ஒரு ஆட்டைத் தேடினார். காணாமல் போனவரை விட்டு விடுதல் அவரது விருப்பமல்ல. சமூகம் தீட்டு தீட்டு என ஒதுக்கி வைத்தவர்களை தீண்டு தீண்டு என தீண்டி அன்பு செய்தவர் இயேசு. சுருக்கமாக, கடவுளின் முன்னால் யாருமே காணாமல் போக வேண்டியவர்கள் அல்ல என்பதையே அவரது வாழ்க்கை வலிமையாய் எடுத்துரைத்தது.

கடைசியில், இயேசுவே புறக் கணிக்கப்பட்டார். இயேசுவே நிராகரிக்கப்பட்டார். இயேசுவே பாவியாக்கப்பட்டார். இயேசுவே படுகொலை செய்யப்பட்டார். அவர் அரசியல் அடக்குமுறைகளிலும், கூட்டத்தின் நிராகரிப்புக் குரல்களிலும் பயணித்தார். எனினும், அவரது உயிர்ப்பு உரக்கச் சொன்னது, கடைசி வெற்றி அநீதிக்கு அல்ல !

இந்த உண்மையே திருச்சபைகளின் அடிநாதமாய் இருக்க வேண்டும். திருச்சபை என்பது பாடல்களோ, செபங்களோ, ஆராதனைகளோ மட்டுமல்ல. திருச்சபை என்பது குரலற்றவர்களின் குரல். முகமற்றவர்களின் முகம். இயேசுவைப் பின்பற்றுதல் என்பது இயேசுவின் ரசிகர் மன்றமாவதல்ல, இயேசுவின் செயல்வீரர்கள் ஆவது.

சமூகம் மறந்தவர்களை நாம் நினைவில் கொள்வோம்.

கேள்விகளுடன் தவிக்கும் குடும்பங்களின் சார்பாய் நிற்போம்.

எல்லோரும் மௌனம் சுமத்தும் இடங்களில் பேசுவோம்.

எல்லா மனிதர்களுக்கும் தேவையான கண்ணியத்தையும், மரியாதையையும் காப்போம். அவர்களுடைய தேசம், கலாச்சாரம், இனம், சாதி, மதம், சமூக அந்தஸ்து.. எதுவானாலும் அரவணைப்போம்.

சின்னம் சிறு சகோதரர்கள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்றார் இயேசு !

இந்த நாளில் நம்மைச் சுற்றிய பகுதிகளில் இருக்கும் இத்தகைய மக்களைத் தேடி அரவணைப்போம். அவர்களுக்கு நம் பேரன்பைக் காட்டுவோம், அதன் மூலம் இயேசுவை வெளிப்படுத்துவோம்.

# அரசியான புனித கன்னி மரியா

அருட்பணி. **மைக்கேல் ராஜ்**

"***விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் அரசி – அன்னை மரியா***"

அரசியான புனித கன்னி மரியா என்ற திருவிழாவை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22-ம் தியதி திருஅவை கொண்டாடுகிறது. அன்னை மரியா விண்ணேற்பை ஆகஸ்ட் 15 அன்று கொண்டாடிய எட்டாம் நாளில், அவர் விண்ணகத்தின் அரசியாக மகிமைப்படுத்தப்பட்டதை திருச்சபை நினைவுகூருகிறது.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர். (திருவெளி 19:16). ஆகவே, அவருடைய தாயாகிய அன்னை மரியா, அவரது மீட்புப் பணியில் சிறப்பாக பங்கேற்றதால், அரசியாகப் போற்றப்படுகிறார். அரசியான புனித கன்னி மரியா என்ற திருவிழா தொடக்ககால மக்களின் நம்பிக்கையையும், தந்தையர்களின் எழுத்துகளில் பிரத்திபலித்த உண்மையையும், அங்கீகரிக்கும் ஒரு செயல்.

## விவிலிய நோக்கில்

கபிரியேல் தூதர் அன்னை மரியாவுக்கு தூதுரைத்த போது “அருள்மிக பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” (லூக் 1: 28) என வாழ்த்தினார். மேலும் வானதூதர் “அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். (லூக் 1: 33) எனவே ஆண்டவரை அரசராக ஏற்றுக்கொள்ளும்போது அவரது அன்னையை விண்ணக அரசியாக போற்றுவதும் முறையானதே.

வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது: பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவரது காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார். (திருவெளி 12:1) திரு அவை மரபில், இந்த உருவகம் அன்னை மரியாவையும், இறைமக்களையும் குறிக்கும் அடையாளமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. இவ்வாறு திருவெளிப்பாடு அன்னை மரியாவை விண்ணகத்தின் அரசியாக வெளிப்படுத்துகிறது.

## திருஅவை பார்வையில்

தொடக்ககால திருஅவையிலும், இறையியல் வல்லுநர்களாலும், புனிதர்களாலும் திருத்தந்தையர்களாலும் அன்னை மரியா அரசியாக போற்றப்படுகிறார். எனவே திருத்தந்தை 12-ம் பயஸ் 1954-ஆம் ஆண்டு தனது திருமடலின் வழியாக ஆகஸ்ட் 22-ஐ அரசியான அன்னை மரியாவின் திருவிழாவாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அன்னை மரியா கிறிஸ்துவோடு இணைந்து மீட்பின்



பணியில் பங்கேற்றதாலும், இறைவனுக்கு முழுமையான கீழ்ப்படிதலை வெளிப்படுத்தியதாலும், அரசியின் பெருமையைப் பெற்றார் என்று அவர் வலியுறுத்தினார்.

மரியா, "இதோ ஆண்டவரின் அடிமை" (லூக்கா 1:38) என்று இறைவனின்

திருவுளத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்ததே அவரை அரசியாக உயர்த்தியது. மேலும் இது அவரது தாழ்மை, தூய்மை, கீழ்ப்படிதல் மற்றும் நம்பிக்கையின் காரணமாக இறைவன் அவரை மகிமைப்படுத்தியதின் வெளிப்பாடு. அரசி என்பது அதிகாரத்தின் அடையாளமல்ல. அதிகாரத்தின் பெருமையும் அல்ல. மாறாக, இறைவன் அளித்த மகிமையின் அடையாளம்.

திருஅவையின் தாய் அன்னை மரியா விண்ணகத்தில் மகிமைப்படுத்தப்பட்டவர். அவர் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின், தனது மகனாகிய கிறிஸ்துவோடு மகிமையில் பங்குபெற்றார். அதனால் திருஅவை அவரை “விண்ணக அரசி“ எனப் போற்றுகிறது.

**நமது பார்வையில்**

அன்னை மரியா அரசி என்பது ஆட்சி செய்யும் அதிகாரத்தின் குறியீடு அல்ல. அது அன்பு, தாய்மை, பரிவு மற்றும் சேவையின் பொறுப்பைக் குறிக்கிறது. தாழ்ச்சியுடையவர்களாக நாமும் வாழும்போது அவர் நமக்காக தம் மகனாகிய இயேசுவிடம் தொடர்ந்து மன்றாடுவார். இறைவனின் அரசில் நமக்கும் பங்கு தருவார்.

அன்னை மரியா கிறிஸ்து அரசரின் தாய், விண்ணக மண்ணக அரசி. விண்ணக மகிமையில் பங்குபெற்றவர். எனவே அவரை “அரசியான புனித கன்னி மரியா“ என்று திருச்சபை அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கிறது. இது அன்னை மரியா இறைவனோடு முழுமையாக ஒன்றித்திருப்பதன் அடையாளமாகும். நம் அன்புத் தாய் அன்னை மரியா நம் அனைவருக்கும் நம்பிக்கையின் தாயாகவும், ஆறுதலின் அரசியாகவும் விளங்குகிறார். நாமும் அன்னை மரியாவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு, இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றும் வாழ்க்கை வாழ்ந்தால், கிறிஸ்துவின் நிலையான அரசில் பங்கு பெறும் அருளைப் பெறுவோம்.

# ஆகஸ்ட் மாத ஆயர் அலுவல்கள்

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Kaikal Iyakkam Diocesan Conference | Vettuvenni | 11.00 am |
| 02 | Thanksgiving Mass | Madurai | 06.00 pm |
| 04 | Vespers | Therku Kallikulam | 06.30 pm |
| 06 | Feast Mass | Kaamanayakkanpatti | 06.30 pm |
| 07 | Board Meeting | Nattalam Shrine | 05.00 pm |
| 08 | Meeting with Aided Teachers | Thirithuvapuram | 03.00 pm |
| 09 | Feast Mass | Manavilai | 07.30 am |
| | Thanksgiving Mass for Mariyaayin Senai | Murasancode | 04.00 pm |
| 10 | Board Meeting – SXCCE | Chunkankadai | 04.00 pm |
| 12 | Chapel Blessing | Sahayanagar | 07.00 am |
| 15 | Feast Mass | Mathiravilai | 09.00 am |
| | Finance Committee Meeting | Bishop’s House | 03.00 pm |
| 16 | Feast Mass | Konnakuzhivilai | 08.30 am |
| 18 | Thanksgiving Mass with Deacons | Nattalam | 05.00 pm |
| 30 | Feast Mass | Kulasekharam | 09.00 am |
| 31 | Priests' Day Fellowship | Bishop's House | 05.00 pm |

# பெண்கள் சமத்துவ நாள்

வேதியர். **மேரி லிசி**

அமெரிக்க அரசியலமைப்பில் 1920 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 அன்று 19வது திருத்தம் கொண்டுவரப்பட்டு பெண்கள் வாக்குச் செலுத்த உரிமை பெற்றனர். இந்த நாளை நினைவுகூரும் வகையிலும், பெண்களும் ஆண்களும் இணையானவர்கள் என்பதை வலியுறுத்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 26 பெண்கள் சமத்துவ நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**குடும்பத்தில் சமத்துவம்**

பெண்கள் கல்வியில் சிறந்து உயர் பதவிகள் பெற்றுப் பொருள் ஈட்டினாலும், வீட்டு வேலை, குழந்தைவளர்ப்பு, முதியோரைப் பேணுவது போன்றவை எழுதப்படாத சட்டமாக அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. குடும்பப்பொறுப்புகளை இணைந்து பகிர்ந்து செய்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

குடும்பங்களின் சொத்துக்களை யார் பெயரில் பதிவு செய்துள்ளோம்? உழைத்து வாங்குபவர் தனது பெயரில் பதிவு செய்தலே சமத்துவம்.

**பங்குத்தளங்களில் சமத்துவம்**

பங்கேற்பு அமைப்புகளில் அதிகமான பெண்கள் ஈடுபடுகின்றனர். ஆனால் முடிவெடுக்கும் தலைமைப் பொறுப்புகள் யார் கையில் உள்ளன?

ஊர்ப் பொதுக்குழுக் கூட்டத்தில் பெண்கள் சமமாகப் பங்கேற்றுக் கருத்துக் கூறும் உரிமை எல்லாப் பங்குத்தளங்களிலும் உள்ளதா?

பேரவை நிர்வாகத்தில் 3ல் ஒருவர் பெண் என்ற விதியால் உரிமை பெறுகிறார்கள். விதி இன்றி இருவராவது தேர்வு செய்யப்படும் நிலையே சமத்துவம்.

**சமூகத்தில் சமத்துவம்**

கல்வி, வேலை, அரசியல், அறிவியல், விஞ்ஞானம், விளையாட்டு என எல்லாத் துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். பெண்கள் மட்டுமே பங்கேற்கின்ற அமைப்புகள், சுயஉதவி குழுக்கள் இவற்றில் பணப்பரிவர்த்தனை, முடிவெடுப்பது, தலைமைப்பொறுப்பு வகிப்பது, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது போன்ற அனைத்தையும் பெண்களே மேற்கொள்கின்றனர்.

ஆனால் பெண்ணும், ஆணும் இணைந்து வருகின்ற இடங்களில் பெண்களின் திறமை குறைத்து மதிப்பிடப்படுகிறது. ஒரு மனிதரின் உயர்வு அவர் பெண்ணா ஆணா என்பதில் இல்லை. அவரது அறிவு, திறமை, உழைப்பு இவற்றில் உள்ளது.



பாலினத்தை வைத்து மதிப்பிடும் மனநிலை மாறி திறமையை வைத்து மதிப்பிடும் சமூகம் உருவாக வேண்டும்.

காலம்காலமாக அடிமைகளாக இருந்த பெண்ணினத்தை அனைத்துத் தளங்களிலும் தகுதிப்படுத்துவது என்பது முதன்மையானது. அனைத்துத் துறைகளிலும் அவர்களுக்கான வாய்ப்புகளை வழங்கித் திறமைப்படுத்துவது காலத்தின் தேவை.

பெண்கள் சமத்துவ நாள் என்பது ஒவ்வொரு ஆண்டும் பெயரளவில் கொண்டாடப்படும் நாளாக அல்லாமல் ,குடும்பம் முதல் சமூகம் வரை பெண்களுக்கு சமமான மதிப்பும் உரிமையும் வழங்கும் விடியலின் நாளாக விளங்கட்டும்.

# அருளாளர் பிரெடரிக் ஓசானம்

திரு. **பால் ராஜ்**
வின்சென்ட் தே பவுல் சபை, குழித்துறை மத்திய பேரவை

பிரெடரிக் ஓசானம் இத்தாலி நாட்டிலுள்ள மிலான் நகரில் 1813 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் பிறந்தார். இவரின் தந்தை ஜீன் அந்தோணி பிராங்காய்ஸ் ஓசானாம் பதினான்காம் லூயி மன்னர் ஆட்சியில் அரசு வழக்கறிஞராக இருந்து பின்னர் அரசு நீதிபதியானார். இவரின் தாயார் மேரி நாண்டாஸ் பிரபலப் பட்டு வியாபாரியின் மகள் ஆவார்.

பிரெடரிக் ஓசானம் தன் தாயை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தார். தாயின் இறை நம்பிக்கையும், தாய், தந்தை ஆகியோரின் பிறர்நல பணி மற்றும் அவர்களின் ஆன்மீக வாழ்வு ஆகியவை ஓசானாமிற்கு மிகவும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது. தாய் தந்தையை தவிர தம் மூத்த சகோதரி எலிசபெத் மற்றும் தங்கள் வீட்டு பணிப்பெண் மேரி கிராசியா ஆகியோர் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார் ஓசானாம்.

1822-ல் இருந்து 1829 வரை லயான்ஸ் நகரின் இராயல் கல்லூரியில் கல்வி பயின்றார். பின்னர் ஓசானாம் சட்டம் பயின்றார். சட்ட இயலில் முனைவர் பட்டம் பெற்று மிகச்சிறந்த சட்ட வல்லுநராகத் திகழ்ந்தார். இலக்கியத்திலும் முனைவர் பட்டம் பெற்ற அவர் லயன்ஸ் நகரில் வணிகவியல் சட்டப் பேராசிரியராகப் பணியாற்றினார். சார்போன் பல்கலைகழகத்தில் இலக்கியப் பேராசிரியர் சார்லஸ் கிளாடு பாரியல் என்பவருக்கு உதவியாளராகப் பணியாற்றினார். 1841-ம் ஆண்டு அமிலி சோலாகிரோக்ஸ் என்ற பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். திருமணபந்தத்தின் அன்புப் பரிசாக 1845-ம் ஆண்டு அவர் ஒரே மகளாகிய மேரி பிறந்தார். சார்போன் பல்கலைகழகத்தில் பல்வேறு உயர் பொறுப்புகளை வகித்தார்.

பிரஞ்சு புரட்சியின் விளைவாகத் திருச்சபைக்கு எதிராகச் செயல்பட்ட சைமோனியர்கள் என்னும் குழுவினர் உங்கள் திருச்சபை ஏழை, எளிய மக்களுக்கு என்ன செய்தது என்ற கேள்விக்கு விடையாக 1833-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ம் நாள் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் முதல் கிளைச் சபையை தம் 6 நண்பர்களோடு இணைந்து உருவாக்கினார். திருத்தந்தையர்களின் அனுமதியோடு உலகின் பல நாடுகளுக்குச் சென்று வின்செந்தியன் சபையை உருவாக்கினார். அவர் உருவாக்கிய சபை இன்று உலகம் முழுவதும் 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்து விரிந்து ஏழை, எளிய மக்களுக்குப் பிறரன்புப் பணி என்னும் சேவை புரிந்து வருகிறது.



இவரின் சேவையைப் பாராட்டி மாண்புச் சேவையின் செவிலியர் என்ற சிறப்பு விருது இவருக்கு வழங்கப்பட்டது. 1852 இல் உடல் நலக்குறைவால் ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். கடும் உடல்நலக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட பிரெடரிக் ஓசானாம் பல்வேறு சிகிச்சைகள் மேற்கொண்டும் சிகிச்சை பலனளிக்காமல் 08.09.1853 அன்று தம் 40-வது வயதில் மார்செய்ல்ஸில் காலமானார். அவரது உடல் பாரீஸ் நகரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. 06.07.1993-ல் திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலால் வணக்கத்துக்குரியர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். 22.08.1997 அன்று திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட பிரெடரிக் ஓசானாம் உலகெங்கும் பிறரன்பு பணியாற்றும் நல்மனம் கொண்ட வின்செந்தியர்களின் பணிகள் வழியாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

# சிலுவை நமது ஏக நம்பிக்கை

அருள்பணி. **மரிய ஆன்றணி**

அன்புள்ள புதிய தேடல் பத்திரிக்கை வாசகர்களே,

முதன் முதலாக உங்களனைவரையும் இந்தக் கட்டுரை வழியாகச் சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சி. "சிலுவையே நமது ஏக நம்பிக்கை" என்ற இந்தத் தலைப்புக்கு இதைவிட ஒரு உண்மை நிகழ்வை எடுத்துகாட்ட முடியுமா என்று எனக்கு தெரியவில்லை. Christian Liturgy என்ற புத்தகத்திலே இந்த நிகழ்வை வாசித்தேன். தேசத் தந்தை என்று அழைக்கப்படும் மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் சட்டம் படித்து கொண்டிருந்தபோது தன்னுடைய சகச் கிறிஸ்தவ நண்பரிடம், என் நாடு அடிமைப்பட்டு கிடக்கிறது, அதற்கு விடுதலை தருவது என்ன வழி என்று தெரியவில்லையே, என்று அடிக்கடி புலம்பிக் கொண்டேயிருப்பாராம். அவருடைய நண்பரும் ஆறுதல் எவ்வளவோ சொல்லியும் காந்தியைத் திருப்திப்படுத்த முடியவில்லை. ஒருமுறை கிறிஸ்தவ நண்பர் காந்தியடிகளிடம் "நண்பரே, உங்கள் மனதிருப்திக்காக எங்கள் ஆலயத்திற்கு வாருங்கள், அங்குள்ள ஒவியங்கள் மனநிம்மதியையும், மகிழ்ச்சியையும் தரும்" என்று சொல்ல, காந்தியடிகள் ஏற்றுக்கொண்டார். இருவரும் ஆலயத்திற்குச் செல்ல நண்பர் வேகமாக உள்ளே சென்று சில நிமிடங்களுக்கு பின் பின்னோக்கி பார்த்தால் காந்தியைக் காணவில்லை. ஆலயத்தின் உள்ளே காணாத காந்தியை தேடி வெளியில் வந்த நண்பர் காந்தியைப் பார்த்து திடுக்கிட்டார். காரணம், காந்தி அங்கிருந்த திருச்சிலுவையை உற்றுப் பார்த்து கொண்டிருந்தார். அருகில் சென்ற நண்பர், ஏன் ஆலயத்திற்குள்ளே வரவில்லை? என்று கேட்டவுடன், காந்தி பதில் சொன்னார், நண்பரே இவ்வளவு நாட்கள் என் நாட்டை விடுவிக்க வழி என்ன என்று தேடி கொண்டிருந்தேன்; இப்போது எனக்கு பதில் கிடைத்து விட்டது அது என்னவென்றால் இந்தச் சிலுவையே எனக்கு சிறந்த பாடம். இந்தச் சிலுவையில் உள்ள இயேசுவிடமிருந்து அகிம்சை என்ற புதிய வழியைக் கற்றுக் கொண்டேன், என்று சொல்லி முடித்தார்.

அன்பார்ந்தவர்களே, "சிலுவை நமது ஏக நம்பிக்கை" என்பதை இன்னும் சுலபமாக புரிந்துகொள்ள வேண்டுமென்றால், புனித பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதம் 15: 42, 43 மற்றும் 44 வசனங்களை வாசித்துப் பார்த்தால் தெளிவாகப் புரியும். "அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமையுள்ளதாய் உயிர்பெற்று எழுகிறது. மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது." இந்த வசனங்களை நல்ல ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் நிறைய உண்மைகளை புரிந்து கொள்ள முடியம். ஏனெனில் பவுல் தான் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தின் 1: 18-ல் சிலுவை யார் யாருக்கு எப்படிப்பட்டது என்பதைத் தெளிவுப்படுத்தி உள்ளார். "சிலுவைபற்றிய செய்தி அழிந்து

போகிறவர்களுக்கு மடமையே. மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" என்று தெளிவாகச் சொல்லிவிட்டு 15- வது அதிகாரத்தின் 14 -ல் -கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகி விடும்" என்று மிக அழகாக உணர்த்துகிறார். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே நமது நற்செய்தி, நமது நம்பிக்கை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். A.W. Tozer என்ற எழுத்தாளர் தன்னுடைய The Radical Cross என்ற புத்தகத்தின் தொடக்கத்திலே சிலுவையைப் பற்றி ஒரு அழகான சொல்லாடலைப் பயன்படுத்துகிறார். அதாவது சிலுவை கிறிஸ்துவோடு இணைந்தபின் “changed from a thing of death to a thing of beauty.”

அன்பார்ந்தவர்களே, சிலுவை நமது ஏக நம்பிக்கை, அந்தச் சிலுவை தருகின்ற முக்கியமான பரிசு தனிமை. இந்த வார்த்தை எதிர்மறையாகத் தெரியும். ஆனால் உள்ளார்ந்து சிந்திக்கும் போது தனிமை தருகின்ற ஆறுதலைப் பற்றித் தெளிவுற விளங்கி கொள்ள முடியும். இதற்கு பல எடுத்துக்காட்டுகளாக நாம் பழைய ஏற்பாட்டு மாந்தர்களைக் குறிப்பிடலாம். நோவா, ஆபிரகாம், மோசே, யோசப்பு, தாவீது மற்றும் இறைவாக்கினர்கள், திருத்தூதர்கள் இவர்கள் அனைவரும் கடவுளால் தனிமைப் படுத்தப்பட்டார்கள் ஆனால் கைவிடப் படவில்லை. மாற்கு 14: 50 சொல்கிறது, "அப்போது சீடர் அனைவரும் அவரை விட்டுவிட்டுத் தப்பி ஓடினர்." அப்போது என்ற வார்த்தை குறிப்பிடுவது எதையென்றால் இயேசுவைத் தீர்ப்பிட்டுச் சிலுவை சுமக்க வைத்தபோது என்ற பதிலை சுலபமாக சொல்லி விடலாம். இயேசு தனித்து விடப்பட்டார். ஆனால் கடவுளான அவரோ யாரையும் தனிமைப்படுத்தவில்லை என்ற உண்மையை அவரின் வார்த்தைகள் தெளிவுப்படுத்துகின்றன. யோசுவா 1:5 "உன்னோடு இருப்பேன். உன்னைக் கைநெகிழ மாட்டேன். கைவிடவும் மாட்டேன்." இதே வார்த்தைகளை இயேசு புதிய ஏற்பாட்டில் மத் 28: 20 -ல் "உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்." என உரைக்கிறார் ஆக, சிலுவை தரும் தனிமை என்பது இயேசுவின் உடனிருத்தலைத் தெளிவாக நமக்கு உணர்த்துகிறது. இந்த உடனிருத்தல் என்பது முதலில் ஆறுதலைத் தருகிறது. பின்பு மனவிடுதலையையும் நிம்மதியையும் தருகிறது. இன்னும் சிறப்பாகப் புதிய ஆற்றலையும், அந்த ஆற்றலின் வழியாகப் புதிய முயற்சிகளை எடுக்க உதவிகரம் தருகிறது. இதற்கு எடுத்துகாட்டுதான் காந்தியடிகள் என்பதை அனைவரும் உணர்த்து சிலுவையே நமது ஏக நம்பிக்கையாக வாழ வளர வாழ்த்துக்கள்.

# அம்மா

தாயே என்னை கனமென்று
கருதியிருந்தால்
கருவினிலே கரைத்திருக்கலாம்
சுமையென்று நினைத்திருந்தால்
உருவாகும் முன்னே
உதறிவிட்டிருக்கலாம்
நீயோ நித்திரை பல பத்தியம்
எத்தனையோ இருந்தும்
பத்து திங்கள் பக்குவமாய் சுமந்து
பெற்றெடுத்தாயே!
தாங்காத வலியினிலும் உன்
உதிரத்தை
பாலாய் வார்த்து உயிர் தந்தாயே!
வருத்தும் பட்டினியிலும் தாலாட்டு
பாடினாய் உன் தூக்கம் மறந்து...

**ம. டேவிட் டிலன்,** முளகுமூடு

# ஆசிரியப்பணியும் சவால்களும்

- ஜான் இளங்கோ

***ஆசிரியர் பணி அறப்பணி*** என்பார்கள். மாதா பிதா குரு தெய்வம் எனக் கடவுளுக்கு மேலாகப் பார்க்கப்பட்டவர் ஆசிரியர். எழுத்தறிவித்தவன் இறைவன் என்பர். ஆனால் நவீன உலகம் இவற்றையெல்லாம் புறந்தள்ளியிருக்கிறது. உலகம் மாறிப் போய் மயங்கி நிற்கிறது. நீதி, நேர்மை, நெறிமுறைகள் தேவையற்றவனவாகியுள்ளன. கூகுளும், அலைபேசியும் உலகை வழி நடத்தும் வல்லுனர்களாக மாறி இருக்கிறார்கள். குடும்ப வாழ்க்கை, தனிமனிதச் சுதந்திரம் சிதைந்து போயிருக்கிறது. இவற்றாலெல்லாம் நேரிடுகிற பேராபத்து ஆசிரியர்களுக்கும் வந்துள்ளது.

ஆசிரியர்களை நம்பி இன்று மாணவர்கள் இல்லை. பிள்ளைகள் மீது பெற்றோரின் கவனிப்பு, தனிப்பட்ட அக்கறை இன்று இல்லாமல் போய்விட்டது. சமூக ஊடகங்களும், அலைபேசியும் காட்டும் வழிகாட்டுதல்களை நம்பிச் சிந்திக்காமல் பின் செல்லும் ஆட்டு மந்தைக் கூட்டமாக இன்றைய மாணவர் சமூகம் மாறிப்போயிருக்கிறது. எப்படியாவது படிக்க வையுங்கள் என்று பெற்றோர் சொன்ன காலம் மலையேறி, கோபப்படாதீங்க. அவனுக்கு முகத்தைக் கறுத்தாலே பிடிக்காது. அவனுக்கு எரிச்சல் மூட்டாதீங்க என்று பிள்ளைகளுக்கு வக்காலத்து வாங்குகிற பெற்றோரே இன்று ஏராளம்.

அடிக்கக்கூடாது, திட்டக்கூடாது, மனம் நோகும்படி பேசக்கூடாது. ஆனால், வெற்றி பெற வையுங்கள் என்று பொறுப்பில்லாமல் பதிலளிக்கும் அரசும், பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்காத பெற்றோரும் சமூக ஒழுக்கத்தைப் புறந்தள்ளி விட்டு சமூக ஊடகங்களின் வழிகாட்டுதலால் உந்தப்பட்டுத் தறிகெட்டு நடக்கும் மாணவச் சமூகம் இன்றைய ஆசிரியர்களுக்கு ஒரு மிகப்பெரிய சவால் தான்.

இன்றைய பிள்ளைகளுக்குத் தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லை. விட்டுக் கொடுக்கும் மனநிலை இல்லை. வரலாறுகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லை. திரைப்படக் கவர்ச்சியும், ஆபாசமும், வன்முறையும் சரி என்று வாதிடுகிற ஒரு கூட்டமாக இன்றைய மாணவர் சமூகம் வளர்ந்து வருவது எதிர்காலத்தின் சாபக்கேடு. வழிகாட்டுதல்களை ஏற்க மனமின்றி வளர்ந்து வரும் மாணவர்களால் கல்வியில் கவனம் செலுத்த முடியவில்லை. கவனிக்கும் திறன் இல்லை. ஆசிரியர்களை மதிக்கத் தெரியவில்லை. தங்கள் விருப்பப்படி திரைப்பட பாடம் படித்து விட்டு அதைப் போலவே செயலாற்றும் மாணவர்களைச் சரி செய்யக்கூடிய கடமையும்



பொறுப்பும் ஆசிரியர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், ஆசிரியர்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் விழலுக்கு இறைத்த நீர் போல் பயனற்றுத் தான் போகிறது.

பெற்றோரின் கட்டுப்பாட்டில் இல்லாத மாணவர்கள் இன்று ஏராளம். மாணவர்கள் பலரும் பிரச்சனைகள் நிறைந்த குடும்பங்களில் இருந்து வருகிறார்கள். பெற்றோர் இல்லாத குழந்தைகள், பெற்றோர் பிரிந்து வாழும் சூழலில் வளரும் குழந்தைகள், பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், பாட்டி தாத்தா பராமரிப்பில் வாழும் குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், டிஸ்லெக்சியா, ஆட்டிஸம், சைபர்

ஆக்டிவ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இன்று ஏராளம் பேர் உள்ளனர். உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்த இத்தகைய குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் இந்த ஆசிரியர்களுக்கு உள்ளது. இதுவும் இந்த ஆசிரியப் பணியின் மிகப்பெரிய சவால் தான்.

அண்மையில் பன்னிரெண்டாம் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன். கடைசி பெஞ்சில் ஒரு மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். அருகில் போய் என்னவென்று விசாரித்தேன். சுகம் இல்லை என்றான். என்ன செய்கிறது என்று கேட்டேன். அதையெல்லாம் சொல்ல முடியாது என்று முணுமுணுத்தான். வேறு எங்கோ பார்த்துக் கொண்டு ஏதேதோ முணுமுணுத்தபடி நின்றான். எனக்குக் கோபம் வரவே, திட்டி விட்டு உட்காரென்று சொன்னேன். மறுநாள் பெற்றோரை வரச் சொல்லி தொலைபேசியில் அழைத்தேன். அம்மா வந்தார்கள். அவர்களிடம் மாணவனுடைய படிப்பும் கவனமும் சரியில்லை என்று சப்தமிட்டேன். அந்த அம்மா அழுது கொண்டே, சார் இரண்டு நாளா அவன் அப்பா குடித்துவிட்டு வந்து வீட்டில் ஒரே பிரச்சனை. அவன் புத்தகப் பையை எடுத்து வெளியில் எறிந்து விட்டார். அவனை அடித்துத் துன்புறுத்துகிறார். அவன் இரண்டு நாட்களாக சரியாக சாப்பிடவில்லை. பள்ளிக்குப் போகமாட்டேன் எனக் கூறுகிறான். நான் தான் வற்புறுத்தி அனுப்பி வைத்தேன் என்றார். எனக்கும் அவரது வாழ்க்கைக் கதையைக் கேட்டு வருத்தமாக தான் இருந்தது.

ஆற்றுப்படுத்துதல் தேவையான ஒரு மாணவனை கோபமாக திட்டியது எனக்குள்ளேயே வருத்தத்தை உருவாக்கியது. மேலும் விசாரித்தால், வகுப்பில் இருந்த பெரும்பான்மை மாணவர்களுக்கும் இப்படி ஆளுக்கு ஒரு பிரச்சனையோடு இருப்பதை அறிய முடிந்தது. இவர்களை ஆற்றுப்படுத்தாமல் எப்படி பாடம் கற்பிப்பது? கற்பித்தாலும் எப்படி இவர்கள் புரிந்து கொள்வார்கள்? இன்றையக் கால சூழலில் ஆசிரியர்களுக்கு இவர்களை எதிர்கொள்வதும் ஒரு சவால் தான்.

வேறு எந்த பணியில் இருப்பவர்களுக்கும் இல்லாமல் ஆசிரியர்களை மட்டுமே குறிவைத்து அரசினால் கொண்டுவரப்பட்ட டெட் (TET) டிஆர்பி (TRB) தகுதித் தேர்வுகளும், கற்பித்தல் தவிர இதர பணிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்துவதும் ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய சவால்தான். இவை ஏற்கனவே இருக்கிற ஆசிரியர்களையும் புதிதாக ஆசிரியர் பணிக்கு வரத் தயாராகுவோரையும் ஆசிரியர் பணிக்கு வரவிடாமல் தடுக்கிறது. கற்பித்தல் திறம்பட நடைபெறக்கூடிய சூழல் இன்று பெரும்பான்மை பள்ளிக்கூடங்களில் இல்லை. மதிப்பெண் சார் கல்வி சமூக தனிமனித ஒழுக்கங்களைச் சிதைத்திருக்கிறது. ஆசிரியர் மாணவர் உறவு முறை சிக்கல்களும் ஆசிரியர் ஓய்வு வயது அதிகரிப்பும் கூட ஆசிரியர்கள் சந்திக்கும் சவாலாகவே உள்ளன. இந்த நிலையிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற பிற பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படும்போது மாணவர்களை கவனிக்க நேரம் குறைவதும் ஆசிரியர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாவதும் சவாலான காரியமாக உள்ளது.

சில நாட்களுக்கு முன் சக ஆசிரியர் ஒருவர் சார் இந்த மாணவர்களை அமைதியாகவே வைக்க முடியவில்லை. 10 நிமிடத்திற்கு மேல் அவர்களால் கவனிக்க இயலவில்லை. எப்படிப் பாடம் கற்பிப்பது என்பதும் புரியவில்லை. எப்படி வெற்றி பெறச் செய்வது என்றும் விளங்கவில்லை என்றார். அலைபேசியின் ரீல்களும் இன்ஸ்டாகிராம் காட்சிகளும் மாணவனின் மனநிலையை தடுமாறச் செய்கின்றன. உறங்க வேண்டிய நேரத்தில் விழித்திருக்கிறான். அலைபேசியை தொடாமல் அவனால் இருக்க முடியவில்லை. இப்படிப்பட்ட மாணவர்களால் கற்பித்தலில் கவனம் செலுத்த இயலாது என்பது உண்மைதான்.? சரியான வழிகாட்டுதல் இன்றி, நெறிப்படுத்தல் இன்றி இவர்களது பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வருவது மிகப்பெரிய சவாலாக தான் இருக்கிறது.

சமூக ஊடகங்கள் அலைபேசி போன்றவற்றால் சீரழிந்து கிடக்கும் மாணவர் சமூகத்தை வழி நடத்துவது, கட்டுப்பாடற்ற பள்ளிச் சூழல்கள், அரசின் தவறான வழிநடத்தல்கள் மாணவர்களின் கவனச் சிதறல்கள், எதையும் சிந்திக்காமல் தடுமாறி நிற்கிற சமூகத்தின் தாக்கம் என மிகப் பெரிய சவால்களை எதிர்கொண்டால் மட்டுமே இன்றைய ஆசிரியர் பணியை திறம்பட செய்ய இயலும். அது எளிதான ஒன்று அல்ல. ஒட்டுமொத்தச் சமூகமும் கவனம் செலுத்தினால் மட்டுமே இந்த மாணவர் சமூகங்களை திறம்பட வழிநடத்த இயலும். அதுவரை மாணவர்களை எதிர்கொள்வது ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவே இருக்கும்.

# வெப்பமயமாகி வரும் பூமியைக் குளிர்விப்போம்

- சிகரம் செபா

அனைத்துலக ஓசோன் படலம் பாதுகாப்பு நாள் 1994 முதல் செப்டம்பர் 16-ம் நாள் ஐக்கிய நாடுகளின் அவையின் வழிகாட்டுதலில் கொண்டாடப்படுகிறது. 2026 ம் ஆண்டில் குளிர்ந்த பூமிக்கான உலகளாவிய நடவடிக்கை (Global Action for a cooler plant) என்கிற மையக் கருவில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. 1990 க்கு பிறகு ஓசோன் படலம் கடுமையாக மெலிந்து பாதிப்புக்குள்ளானது. தற்போது பல்வேறு திட்ட அறிவியல் ரீதியான முயற்சிகளுக்குப் பிறகு ஓசோன் படலம் மீட்சியடையந்து வருகிறது. 2060 க்குள் 1980க்கு முந்தைய நிலைக்கு ஓசோன் படலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்கிற இலக்கோடு உலக ஓசோன் படலம் பாதுகாப்பு நாள் கொண்டாடப்படுகிறது.

### ஓசோன் படலம் (Ozone Layer)

பூமியின் வழிமண்டலத்தில் (Stratosphere) 15 கி.மீ லிருந்து 35 கி.மீ க்குள் அதிகச் செறிவுடைய ஒரு பாதுகாப்புப் படலமாக இருக்கிறது. இதுவே ஓசோன் படலம் எனப்படுகிறது. ஆபத்தை ஏற்படுத்தும் சூரியக் கதிர்களை தடுப்பதற்காக இயற்கையிலே அமைந்த பாதுகாப்பு அமைப்புதான் இந்த ஓசோன் படலம்.

ஓசோன் படலம் துருவப்பகுதிகளில் மிக அடர்த்தியாகக் காணப்படும். குறிப்பாக சூரியனிலிருந்து புற ஊதாக்கதிர்கள் (UV-B, UV-C) பூமிக்கு வருகின்றன. இக்கதிர்கள் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் மற்றும் தாவரங்களுக்கும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் தோல் புற்று நோய்கள் ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. மனிதர்களுக்குக் கண்புரை நோய் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்திக் குறைபாட்டையும் ஏற்படுத்துகிறது.

### ஓசோன் படலம் என்ன செய்கிறது?

ஓசோன் படலம் மிக முக்கியமான இரண்டு பாதுகாப்புப் பணிகளைச் செய்கின்றது. ஒன்று சூரியனிலிருந்து வரும் கேடு விளைவிக்கும் புற ஊதாக்கதிர்களை தடுத்துப் பூமியில் உயிர்களை காக்கின்றன. இரண்டு அதிக வெப்பம் தரும் சூரியக் கதிர்களை உறிஞ்சி கொண்டு வழிமண்டலத்தில் சீரான வெப்பத்தைப் பேண உதவி செய்கிறது. ஓசோன் படலம் இயற்கையான ஒரு பாதுகாப்பு அரண் மட்டுமல்ல. சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பூமி வெப்பமாதலை தடுக்கவும் உதவுகிறது.

### ஓசோன் படலம் குறைபாடு (Ozone Depletion)

வழிமண்டலத்திலுள்ள ஓசோன் படலம் மெலிவடைவதை அல்லது சிதைவடைவதை ஓசோன் படலம் குறைபாடு என்கிறோம். 1970- க்கு பிறகு ஓசோன் படலம் மெலிந்து வருவதும் பாதிப்புக்கு உள்ளாவதும் கண்டுபிடிக்கப்பட்டது. குறிப்பாக 1985-இல் அண்டார்ட்டிக்கா பகுதியில் ஓசோன் படலம் மிகவும் மெலிந்து துளை ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மனிதச் செயல்பாடுகளால் அதிகமாக வெளியிடப்படும் குளோரோ ஃபுளுரோ கார்பன்கள் (Chloro fluorocarbons) தான் ஓசோன் படலம் மெலிந்து போவதற்கு காரணம். மேலும் பல வேதியல் பொருட்களும் இதற்குக் காரணமாகின்றன.

இந்த குளோரோ புளோரோ கார்பன்கள்

எங்கிருந்து வெளிப்படுகின்றன? குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerators) மற்றும் காற்றுச் சீரமைப்பிகளில் (Air condition) பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களிலிருந்து அதிகமாக வெளிப்படுகின்றன. மேலும் தீ அணைப்பான்களில் பயன்படும் வாயுக்களும் இதற்கு காரணமாகின்றன.

**மாண்ட்ரீல் ஒப்பந்தம் (Montreal protocol)**

ஐக்கிய நாடுகளின் வழிகாட்டுதலில் கனடா நாட்டின் மான்ட்ரீல் நகரில் 1987-ல் நடைபெற்ற ஓசோன் படலம் பாதுகாப்பு மாநாட்டில் செப்டம்பர் 16-ம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகளாவிய ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி 1989 லிருந்து குளோரோ புளோரோ கார்பன் உற்பத்தியையும், வெளியீட்டையும் குறைபாடு. இந்த உடன்படிக்கை ஏற்படுவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் பலகட்ட பிரச்சாரங்கள், போராட்டங்கள் நடைபெற்றன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக, ஓசோன் படலத்தை பாதிக்கும் நூறுக்கும் மேற்பட்ட வேதியியல் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறைக்கப்பட்டது.

2016-ல் ருவாண்டாவில் கிகாலி நகரில் நடைபெற்ற மாநாட்டில் 2050 க்குள் குளோரோ புளோரோ கார்பன் வெளியீட்டை 86 வரை குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்தியா இதற்கு முழு ஒப்புதல் தெரிவித்து குளோரோ புளோரோ கார்பன் வெளியீட்டைக் குறைக்க திட்டமிட்டுச் செயல்படுகிறது.

**ஓசோன் படலம் மீட்சி**

மாண்ட்ரீல் ஒப்பந்தந்தின்படி குளோரோ புளோரோ கார்பன்களை வெளியிடும் வேதியியல் பொருட்களின் உற்பத்தி மற்றும் வெளியீடு குறைக்கப்பட்டுள்ளது. லாப வெறி பிடித்த முதலாளித்துவ சக்திகளை எதிர்கொள்ள மக்கள் போராட்டங்களாலேயே இது சாத்தியமாகிக் கொண்டிருக்கிறது. இதே நிலை தொடர்ந்தால் 2050 க்குள் ஓசோன் படலம் பழைய நிலையை அடையும் என்கிற நம்பிக்கை பிறந்துள்ளது.

**பூமியைக் குளிர்விப்போம்**

ஏற்கனவே பூமி வேகமாக வெப்பமாகிக் கொண்டிருக்கிறது. காலநிலை நெருக்கடிகளும் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் பூமியையும், சுற்றுச்சூழலையும் குளிர்விக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். பூமி வெப்பமாதலைத் தடுப்பதற்கான திட்டமிட்ட முயற்சிகளில் இறங்க வேண்டும். குறிப்பாக, புகை படிவ எரிபொருள் (Fossil fuels) பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். புதுப்பிக்கத்தக்க சூழலுக்கு மாற வேண்டும்.

ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் வகையில் நிலைத்த, நீடித்த வளர்ச்சிக்கான ஆற்றலை மிகக் குறைவாக பயன்படுத்தக்கூடிய குளிர்விக்கும் முறைகளுக்கு மாறவேண்டும். தொடர் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களும், போராட்டங்களும் தொடர வேண்டும்.

அடுத்த இதழ் "**அமைதியின் தூதர்களாய்**" என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. நமது "**புதிய தேடல்**" இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்பத் தங்கள் கவிதை, கட்டுரை, கதை, துணுக்குகள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-09-2026**-ம் தேதிக்குமுன், புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

## உயர்ந்து வரும் வாழ்க்கைமுறை நோய்ச் சுமையும்

# இயற்கை மருத்துவத் தீர்வும்

Dr. **ஏஞ்சலின் ஆஷா** BNYS,
CHDP சுங்கான்கடை

இந்த நாகரிக இன்பத்தில் ஒவ்வொரு ஆண்டும் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் நோய்ச் சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. சிகிச்சை முறைகள் மற்றும் மருத்துவ நவீனத்தன்மை வளரும் சூழலிலும் நோயின் பரிணாமத்துவம் கவனிக்ககூடிய ஒன்றாகவே அமைகின்றது. வாழ்க்கை முறை மாற்றத்தால் வரும் நோய்கள் மருந்துகளின் பக்கவிளைவுகளால் வரும் பாதிப்புகள் குறிப்பிடத்தக்க விகிதத்தில் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு உலக நோயாளி பாதுகாப்பு தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 17 அன்று அனுசரிக்கப்படுகின்றது. மருத்துவச் சிகிச்சையின்போது ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உலக சுகாதார அமைப்பு இந்த நாளை தோற்றுவித்தது. அதன்படி தொற்று நோய்களுக்கான பாதுகாப்பான சிகிச்சை என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பான சிகிச்சை என்ற முழக்கத்துடன் அனுசரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முக்கிய நோக்கம் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்றுநோய், இதய நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த நோயாளிகளுக்கு நீண்ட காலச் சிகிச்சை தேவைப்படுவதால் தவறான மருந்து அல்லது நோய் கண்டறிதலில் ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதே இதன் முக்கிய இலக்காகும்.

**தொற்று நோய்களும் இயற்கை மருத்துவமும்**:

இயற்கை மருத்துவம் மற்றும் வாழ்க்கை முறைப் பயிற்சிகள் தொற்று நோய்களைத் தடுக்கும் ஒரே வழிமுறையாக அமைகின்றது. வாழ்க்கை முறை மாற்றத்தால் வரும் நீரிழிவு, புற்றுநோய், இதய நோய்கள் உயர் ரத்த அழுத்தம் கொழுப்பு ஹார்மோன் பிரச்சனைகளை நம் இயற்கை மருத்துவத்தில் உள்ள யோகா உணவு பட்டியல் டயட் சார்ட், உடற்பயிற்சி மூச்சு பயிற்சி, வாழை இலைக் குளியல், காஸ்டிங் வாழ்க்கை முறை மாற்றம் மூலம் சரிசெய்ய முடியும். நம் நோயின் மூல



காரணத்தை கண்டறிந்து அதை சரி செய்வது நாம் நோயற்ற வாழ்வு வாழ உதவுகின்றது. அதன்படி இயற்கை மருத்துவம் உடலின் கழிவு நீக்கம், சரிவிகித உணவு, சரியான உடற்பயிற்சி, ஆரோக்கியமான மனநிலை பேணல், நேர்மறையான எண்ண ஓட்டம் போன்ற பல்வேறு காரணங்களில் கவனம் செலுத்தி ஒரு ஆரோக்கிய வாழ்விற்கு வித்திடுகின்றது. இதன் மூலம் நாம் தனி மனித நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் உயிர் ஆற்றலை சீர்படுத்தி ஆரோக்கியமாக வாழ வழிவகை செய்கின்றது. எனவே இயற்கை மருத்துவம் வழி ஆரோக்கியம் பேணுவோம்.

# பணிக்குழுக்களின் சிறப்புச் செயல்பாட்டு அறிக்கைகள்
## குழித்துறை மறைமாவட்டம்

**பணிக்குழுக்களின் ஒருங்கிணையம்**

- 06.07.2026 பணிக்குழுக்களின் ஒருங்கிணையக் கூட்டம் மறைமாவட்ட முதன்மைப்பணியாளர் பேரருள்பணி. சேவியர் பெனடிக்ட். அவர்களின் தலைமையில் டிரினிட்டி மேய்ப்புப் பணி மையத்தில் நடைபெற்றது. நற்செய்தி பணிக்குழுவின் சிறப்பு அறிக்கை சமர்பிக்கப்பட்டது. ஆண்டுத்திட்ட அடிப்படையில் ஒவ்வொரு பணிக்குழுக்களும் செய்த பணிகள் பகிர்ந்துக் கொள்ளப்பட்டது. 21 பேர் பங்கேற்றனர்.

**சிறப்புப் பயிற்சி**

- 14.07.2026 அன்று டிரினிட்டி மேய்ப்புப்பணி மையத்தில் வைத்துப் பணிக்குழுக்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான சிறப்புப் பயிற்சி பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருள்பணி. N. மார்டின் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **அறிக்கைகள் எழுதும் யுக்திகள்** பற்றி அருள்பணி. அகஸ்டின் அவர்கள் பயிற்சி வழங்கினார்கள். 34 பேர் பங்கேற்றனர்.

**கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு**

***மறைக்கல்விப் பணிக்குழு***

- மறையாசிரியர்களுக்கான அடிப்படை மறைப்பயிற்சியின் (BTCT) 29-ம் பயிற்சிப் பாசறை ஜுலை மாதம் 4 ஞாயிற்றுகிழமைகளில் உண்ணாமலைக்கடை டிரினிட்டி மேய்ப்புப்பணி நிலையம் பயிற்சி அரங்கில் நடைபெற்றது. **திருவிவிலியம் - ஓர் அறிமுகம், அடிப்படை செபங்கள் தரும் அர்த்தங்கள், திருவழிபாடு-அருளடையாளங்கள், சீடத்துவம், மாதிரிவகுப்பு, மாணவர் உளவியல் பார்வையில் மறைக்கல்வி, நற்பழக்கங்கள், கிறிஸ்தியல், ஊடகம் வழி மறைக்கல்வி** ஆகிய தலைப்புகளில் நடைபெற்றது. 95 பேர் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவில் பணிக்குழுச் செயலர் V. ஆன்றூஸ் அவர்கள் சிறப்பாக பயிற்சி பெற்ற மறையாசிரியர்களை வாழ்த்தி சான்றிதழ் வழங்கினார்கள்.
- 26.07.2026 புத்தன்கடை மறைவட்ட மறையாசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி குருவிக்காட்டில் நடைபெற்றது. **ஆசிரியர்களின் ஆளுமைத்திறன்** என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது. 230 மறையாசிரியர்கள் பங்கேற்றார்கள்.
- முளகுமூடு, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு நடைபெற்றது. 28 மன்றங்களிலிருந்து வந்தவர்களுக்கு **மறையாசிரியரின் ஆன்மீகம், குழந்தைகளோடு உடனிருப்போம்** என்ற தலைப்பில் பயிற்சிகள் நடைபெற்றது. 105 பேர் பங்கேற்றனர்.

***திருவழிபாடு பணிக்குழு***

- 18.07.2026 அன்று மாத்திரவிளை மறைவட்டப் பொதுக்குழு நடைபெற்றது. 18 பேர் பங்கேற்றனர்.

***விவிலியப் பணிக்குழு***

- 13.06.2026 வேங்கோடு மறைவட்டப் பொதுக்குழு நடைபெற்றது. 30 பேர் பங்கேற்றனர். புனித அசிசியாரும் இயற்கைநேயமும் என்ற தலைப்பில் கருத்துரை நடைபெற்றது.

**2. சிறார் பணிக்குழு**

- 26.07.2026 காரங்காடு மறைவட்ட பொதுக்குழு கூட்ட பயிற்சி புனித சவேரியார் ஆலயம் தச்சன்பரம்பில் நடைபெற்றது. உதவும் கரங்கள் நம்பிக்கையின் இதயங்கள் என்ற தலைப்பில் நடைபெற்றது. 70 பேர் பங்கேற்றனர்.
- 26.07.2026 மாத்திரவிளை மறைவட்ட வழிகாட்டிகள் கூட்டம் துண்டத்துவிளையில் நடைபெற்றது. 23 பேர் பங்கேற்றனர்.
- மறைமாவட்ட பொதுக்குழுப் பயிற்சி 11.07.2026 டிரினிட்டி அரங்கம் உண்ணாமலைக்கடையில் வைத்துப் புனித அசிசியார் வாழ்கிறார் என்ற தலைப்பில் நடைபெற்றது. 31 பேர் பங்கேற்றனர்.
- 21.06.2026 மாத்திரவிளை மறைவட்டம் இயற்கை உணவு பற்றிச் சிறப்புப் பயிற்சிப் புனித தேவசகாயம் திருத்தலம் நட்டாலத்தில் நடைபெற்றது. 321 பேர் பங்கேற்றனர்.

## 3. இளைஞர் பணிக்குழு

### *இளைஞர் இயக்கம்*

**பொதுக்குழுக்கள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 19.07.2026 | முளகுமூடு | நகரமயமாக்கலின் நிழலில் மறையும் பசுமை உலகம் | 38 |
| 14.06.2026 | திரித்துவபுரம் | Cockroach Janatha Party | 16 |
| 19.07.2026 | புத்தன்கடை | பனைமரம் | 29 |
| 19.07.2026 | காரங்காடு | பனைமரம் | 23 |
| 19.07.2026 | மாத்திரவிளை | பனைமரம் | 19 |
| 14.06.2026 | வேங்கோடு | இயற்கை நேசிப்பு | 35 |

**வழிகாட்டிகள் பயிற்சி**

- இளைஞர் இயக்க முதல் கட்டப் பயிற்சி ஜுலை 3,4,5 ஆகிய நாட்கள் நடைபெற்றது. ஆளுமை வளர்ச்சி, இளைஞர்கள் சந்திக்கும் சவால்கள், விவிலியத்தில் இளைஞர்கள், தலைமைத்துவம், இயக்க நோக்க வரலாறு, இயக்கமாதலின் தேவை ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெற்றது. 22 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

### *இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்*

**மறைவட்டப் பொதுக்குழு**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 05.07.2026 | முளகுமூடு | பனைமரம் | 32 |
| 19.07.2026 | திரித்துவபுரம் | இயக்க செயல்பாடுகள் | 16 |
| 19.07.2026 | புத்தன்கடை | பனைமரம் | 23 |
| 19.07.2026 | காரங்காடு | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 32 |
| 19.07.2026 | மாத்திரவிளை | பனைமரம் | 19 |
| 14.06.2026 | வேங்கோடு | இயற்கை நேசிப்பு | 46 |

## 4. தொழிலாளர் பணிக்குழு

- 26.07.2026 அன்று காரங்காடு மறைவட்டத்தில் கேன்சர் மற்றும் ஸ்டோக் பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சி Dr. Lijo Joseph அவர்களால் கொடுக்கப்பட்டது. மரக்கன்று வழங்கி மரம் நடுதல் நிகழ்வும் நடைபெற்றது. மேலும் தரமான மாக்கன்றுகள் வருகைதந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. 52 பேர் பங்கேற்றனர்.
- முளகுமூடு, மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றன. 40 பேர் பங்கேற்றனர்.

## 5. சமூகத்தொடர்பு பணிக்குழு

- 60 உலகத் தொடர்பு தினச் சிறப்பு நிகழ்ச்சி உன் அறிவின் ஆற்றல்களை கற்பனையான நுண்ணறிவுக் குறியீட்டிற்கு கையளித்து விடாதே. மகத்தான மானுடம் திருத்தந்தை 14 ஆம் லியோ அவர்களின் சுற்றுமடல் குறித்த உரையாடல், மற்றும் அன்றாட அருள்வாக்கு, இறை ஒளியில் நிறைவாழ்வு, புனிதர் வரலாறு, Poster மற்றும் கத்தோலிக்கப் பாடல்கள் தயாரித்து தினமும் whatsapp குழுவில் மற்றும் Youtube Channel - இல் பகிரப்படுகின்றது. நேரலை நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

## 6. பெண்கள் பணிக்கு

**பயிற்சிகள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 01.07.2026 | புத்தன்கடை | இயற்கையை நேசிப்போம் | 20 |

| | | | |
|---|---|---|---|
| 08.07.2026 | திரித்துவபுரம் | இயற்கை கடவுளின் கொடை | 28 |
| 15.07.2026 | வேங்கோடு | இயற்கையைப் பாதுகாப்போம் | 30 |
| 18.07.2026 | முளகுமூடு | இயற்கையைப் பாதுகாப்போம் | 25 |
| 22.07.2026 | காரங்காடு | அசிசியார் வழியில் இயற்கையும் பெண்களும் | 74 |
| 25.07.2026 | மாத்திரவிளை | குமரி மாவட்ட இயற்கையும் பெண்களும் | 60 |

## 7. குடும்பநலம் பணிக்குழு

- திருமண பதிவு செய்தவர்கள் : 31
- திருமண பயிற்சி பெற்றவர்கள் : 132
- குடும்ப ஆற்றுப்படுத்தல் பெற்றவர்கள்: 1

## 8. சிறைப் பணிக்குழு

- 31.07.2026 அன்று மறைமாவட்ட பொதுக்குழு டிரினிட்டி மேய்ப்பு பணி மையத்தில் நடைபெற்றது. 15 பேர் பங்கேற்றனர்.

## 9. அன்பியப் பணிக்குழு

- 11.07.2026 மறைமாவட்ட அன்பிய பணிக்குழுவின் கருத்தாளர் பயிற்சி டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம் உண்ணாமலைக்கடையில் நடைபெற்றது. அருள்பணி ஆல்வின் விஜய் அவர்கள் **போதையால் சிதையும் குடும்பங்கள்** என்னும் சிந்தனையில் பயிற்சி வழங்கினார்கள். 53 நபர்கள் பங்கேற்றனர்.
- 25.07.2026 மாத்திரவிளை மறைவட்டச் சிறப்பு களப்பணி வாள்வச்சகோஷ்டம் பங்கில் நடைபெற்றது. இல்லச் சந்திப்புக் குழுவினர் 51 நபர்கள் பங்கேற்றனர். 20 குழுக்களாக 6 அன்பியங்களின் மொத்தக் குடும்பம் 238 இல்லங்கள் சந்தித்து, மக்களோடு உரையாடி உறவாடி, அன்பியக் கூட்டமும் நடத்தப்பட்டுதல்.

**பொதுக்குழுக்கள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 04.07.2026 | முளகுமூடு | பணித் திறனாய்வு | 40 |
| 25.07.2026 | மாத்திரவிளை | நம்பிக்கை, இறைவேண்டல், பகிர்தல், ஒன்றிப்பு | 42 |
| 26.07.2026 | திரித்துவபுரம் | வீட்டு தோட்டம் அமைத்தல் | 87 |
| 26.06.2026 | வேங்கோடு | பணித் திறனாய்வு | 70 |

**நல உதவி**

- கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவச் செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ. 3,26,242.00/- வழங்கப்பட்டது.

## 10. பட்டியலினத்தார் பணிக்குழு

- புத்தன்கடை, முளகுமூடு, மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றன. நீட் நுழைவு தேர்வு குறித்து பயிற்சிகள் நடைபெற்றன. 43 பேர் பங்கேற்றனர்.
- பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவி தொகை வழங்கும் நிகழ்வு 11.07.2026 ஆயர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது. 23 பேர் பங்கேற்றனர். ரூ. 57,200 வழங்கப்பட்டது.
- தென்மண்டலக் கூட்டம் மற்றும் மறைவட்ட இயக்குநர்கள் கூட்டம் நடைபெற்றது.

## 11. நற்செய்தி பணிக்குழு

- திக்கணங்கோடு, வெட்டுவெந்தி, பாரதப்பள்ளி, நட்டாலம் திருத்தலம் சூசைபுரம், சுவாமியார்மடம் ஆகிய பங்குகளில் நற்செய்திக் கொண்டாட்டம் மற்றும் இரவு விழிப்பு செபம் நடைபெற்றது.

## 12. சுற்றுச்சூழல் இயக்கம்

- உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஜுலை04,2026 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து சிறப்பு பயிற்சி நடைபெற்றது. பேரருள்பணி. சேவியர் பெனடிக்ட் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்கள். அன்னை பூமிக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது, குமரி மாவட்டம் சந்திக்கும் சுற்றுச்சூழல் மற்றும் ஆன்மீகமும் பசுமை திருஅவையும் என்ற தலைப்புகளில் பயிற்சி நடைபெற்றது. 100 பேர் பங்கேற்றனர்.


G.X. Mervin
George Art
SCULPTURE INDUSTRY
ஆலயங்களுக்கு தேவையான சொரூபங்கள்
ஆலய பலி பீடங்கள்
ஓவியங்கள்
தரமான முறையில் செய்து தரப்படும்.
04652-269011
9442006554, 9444786554, 9751993283
St.Michael Street, mela Asaripallam (P.O), K.K. Dist 629 201.
ISO 9001 : 2015 Certificate
www.georgeart.org
mervinart@gmail.com

Date of Publishing : **21-08-2026**
Puthia Thedal Registered with Register of News Paper of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92 Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office - 629167.




Edited & Published by **Rev. Fr. R. PAUL RICHARD JOSEPH** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at **THEDAL PRESS, AZHAGIYAMANDABAM**